வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 20.11.2023 திங்கட்கிழமை | இதழ் : 344 | பக்கங்கள் : 16






## ஆஸியின் வசமானது உலகக் கிண்ணம்

### இந்தியா சொந்த மண்ணில் படுதோல்வி

புதுடில்லி, நவ. 20

நடப்பு உலகக் கிண்ண தொடரில் பலம் வாய்ந்த அணியாக கருதப்பட்ட இந்தியாவை வீழ்த்தி அவுஸ்திரேலியா அணி 2023 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

அஹகமதாபாத் - நரேந்திர மோடி மைதானத்தில் இடம்பெற்ற உலகக் கிண்ண இறுதிப்

11

# கிளிநொச்சி வைத்தியசாலையில் மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறை

## வெற்றிடங்களை நிரப்புமாறு கோரிக்கை

**கிளிநொச்சி, நவம்பர் 20**

**கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் போதிய மயக்க மருந்து நிபுணர், சத்திரசிகிச்சை நிபுணர் மற்றும் கதிரியக்க நிபுணர்களின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு மத்திய மாகாண அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

குறித்த வைத்திய நிபுணர்கள் காரணமாக சனி ஞாயிறு ஆகிய நாட்களில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் அவசர நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படும் அவலநிலை காணப்படுகின்றது.

11

## 2024இல் மூன்று தேர்தல்கள் 31 பில்லியன் ரூபாய் தேவை!

கொழும்பு, நவ. 20

இலங்கையில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு மூன்று தேர்தல்கள் நடைபெறுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ள நிலையில், குறித்த தேர்தல்களை நடத்துவதற்கு 31 பில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றை நடத்த குறித்த நிதி தேவைப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க குறிப்பிட்டார். எனினும், இந்த ஆண்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை

11

## உரும்பிராய் உணவகம் ஒன்றில் நடந்த தகராறில் முதியவர் அடித்துக்கொலை!

யாழ்ப்பாணம்,நவ. 20

உரும்பிராய் தெற்கு பகுதியில் முதியவரொருவர் நேற்று முன்தினம் இரவு அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்காகிய முதியவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உணவகம் ஒன்றில் பணியாற்றும் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிறேமராசன் என்கிற 66 வயதான முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உணவகம் ஒன்றில் ஏற்பட்ட முரண்பாடே கொலைக்கான காரணம் என தெரியவரும் நிலையில் அதே பகுதியை வாய்பேச இயலாத சேர்ந்த 44 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை நடந்த இடத்தில் யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஆனந்த ராஜா நேற்று

11

## ரணிலுடன் அவசரமாக பேசிய நிர்மலா கைதான மீனவர்கள் உடன் விடுதலை!

கொழும்பு, நவ. 20

யாழ்ப்பாணம், பருத்தித்துறைக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் மதியம் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டு, காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்ட 22 இந்திய மீனவர்களும், இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் தலையீட்டின் பேரில் உடனடியாக நேற்று முன்தினம் நள்ளிரவே அவர்களின் படகுகளுடன் விடுவிக்கப்பட்டுத் தமிழகத்துக்குப் பத்திரமாக அனுப்பிவைக்கப்பட்டனர்.

11

## போலி மணல் அனுமதிப் பத்திரம் தயாரித்த இருவர் விசேட குற்றப் பிரிவினரால் கைது!

யாழ்ப்பாணம்,நவ. 20

போலி மணல் ஏற்றும் அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் பெற வேண்டியது கட்டாயம். இந்த அனுமதிப் பத்திரங்கள் கனிவளத் திணைக்களத்தால் வழங்கப்படும். அந்த அனுமதிப் பத்திரங்களையே போலியான முறையில் தயாரித்து இவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

ஒரு மணல் அனுமதிப் பத்திரம் தொடர் பாக மேற்கொள்ள விசாரணைகளில் அந்தப் பத்திரம் போலியானது என்று கண்டறியப்பட்டிருந்தது.

11

## வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைதான இளைஞனின் உயிரிழப்பை விசாரிக்க குழு!

### உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் நியமிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் மீது உறவினர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து விசாரணைகளை முன்னெடுக்க யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தமது மகன் சந்தேகத்தின் பேரில் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு 4 நாள்களுக்கு மேல் தடுத்துவைத்து விசாரணை செய்த பின்னரே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதாக பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில்

11



## கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வு திட்டமிட்டபடி இன்று காலை ஆரம்பம்!

முல்லைத்தீவு, நவ. 20

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது ஏற்கனவே திட்டமிட்டபடி நாளை 20 ஆம் திகதி ஆரம்பித்து தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவ தெரிவித்தார்.

அகழ்வுப் பணி இன்று காலை 8 மணியளவில் ஆரம்பித்து தொடர்ச்சியாக இடம்பெற இருப்பதாகவும் புதைகுழிக்குள் நீர் தேங்காதவாறு போடப்பட்டுள்ள கொட்டகையானது மேலும் 10 அடிக்கு நீட்டப்பட்டுள்ளது எனவும், இம்முறை அகழ்வுபணி நடைபெறும் போது ராடர் கருவியை பாதுகாப்பு அனுமதியை பெற்று பரீட்சித்து பார்க்க எதிர்பார்த்துள்ளதாகவும். இதன் மூலம் எவ்வளவு

11

## கூட்டமைப்பினர் மகிந்தவால் சுதந்திரமாக நடமாடுகின்றனர்

### கூறுகிறார் மொட்டுக் கட்சி எம்.பி

கொழும்பு, நவ. 20

புலிகளுக்கு முடிவு கட்டி நாட்டு மக்களுக்கு மூச்சுதந்த ராஜ பக்சக்கள் துரோகிகளா? மகிந்தவின் புண்ணியத்தால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்குகூட சுதந்திரமாக நடமாடமுடிகின்றது என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

அண்மையில் பிரான்ஸிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த நண்பர் ஒருவருடன் நீண்டநேரம் பலதும் கதைத்துக்கொண்டிருந்தோம்.

அப்போது அவர் சென்ன கதை ஒன்று இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

தொண்ணூறுகளில் யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய சினிமாக்களுக்கு விடுதலைப் புலிகள் தடை விதித்திருந்த காலம். அப்போது அவர் பிரான்ஸிலிருந்து விடுமுறையில் யாழப்பாணம் வந்திருந்தாராம். நீண்டகாலத்தின் பின்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர், குடும்பத்துடன் மகிழ்வாக நாட்களைக் கழித்துக்கொண்டிருந்த போது, ஒரு நாள் வீட்டிலிருந்தவர்கள் தென்னிந்திய திரைப்படத்தை பார்க்க விரும்பியிருக்கின்றனர். அந்தக் காலத்தில் படம் பார்ப்ப தெனில் வீடியோ கசெற்றில்தான் பார்க்கவேண்டும். அதற்காக வீடியோ டெக், படக்கொப்பி என்பவற்றை வாடகைக்கு எடுத்து படம் பார்த்துக்கொண்டிருந்தாராம். அங்கே வந்த விடுதலைப் புலி போராளிகள், தடைசெய்யப்பட்ட படத்தை பார்த்ததற்காக பெரிய தொகை பணத்தை அபராதமாக செலுத்துமாறு கேட்டுப் பெற்றதுடன், வீடியோ சாதனைங்களையும் தம்மோடு எடுத்துச் சென்று விட்டனராம்.

அவர் அந்தப் படத்தை அரைவாசிப்பகுதிதான் அப்போது பார்த்து முடித்திருந்தார்.

அவர் பிரான்ஸ் திரும்பிய பின்னர், விடுதலைப் புலிகள் சொந்தமாக நடத்திய 'லுன் இன்ரர் நெசனல்' என்ற கடையில் அந்தப் படத்தின் பிரதியை வாடகைக்கு எடுத்து படத்தின் மிகுதியை பார்த்து முடித்தாராம்.

அந்த நண்பர் சொன்னது உண்மையா அல்லது அவரது கற்பனையா என்பது தெரியவில்லை. ஆனால், ஒரு காலத்தில் தாயகத்தில் தென்னிந்திய சினிமாக்கள் மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்கின்றன என்று அவற்றை தடைசெய்திருந்ததும், அதேவேளையில் புலம்பெயர் நாட்டில் தென்னிந்திய திரைப் படங்களை இறக்குமதி செய்து அவற்றை திரையிடும் வர்த்தகத்தை விடுதலைப் புலிகளே 'லுன் இன்டர்நேசனல்' என்ற நிறுவனத்தின் மூலம் செய்து கொண்டிருந்ததும் நடந்து முடிந்த வரலாறுகள்.

தாயகத்திலுள்ள மக்களுக்கு தென்னிந்திய திரைப்படங்கள் அவர்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்கின்றன என்பது உண்மையானதாக இருக்கலாம். ஆனால் அந்த விடுதலைப் போராட்டத்துக்கு தூண்களாக இருந்தவர்கள் புலம்பெயர் தமிழர்கள். அவர்களின் நிதிப்பங்களிப்பு அந்தப் போராட்டத்திற்கு முக்கிய வகிபாகத்தை வகித்ததும் தெரிந்தவைதான். ஆனால் அவர்கள் மத்தியிலும் திரைப்படங்கள் விடுதலை உணர்வை மழுங்கடிக்கத்தான் செய்தன. ஆனாலும் அவற்றை அங்கே தடைசெய்ய நினைத்திருந்தாலும் அதனைச் செய்திருக்கமுடியாது. அதனால்தான் அதனையே எப்படி நமக்கு பயனுள்ளதாக்கலாம் என்று விடுதலைப் புலிகள் சிந்தித்திருக்க வேண்டும்.

அந்தச் சம்பவம்தான் அந்தச் செய்தியைப் படித்தபோது நினைவிற்கு வந்தது.

யாழ்ப்பாணத்தில் புலம்பெயர் தமிழர் ஒருவர் திறக்கவிருக்கும் கல்வி நிறுவனம் ஒன்றின் திறப்பு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அடுத்தமாதம் பிரபல தென்னிந்திய பாடகர் ஹரிகரனின் இசைநிகழ்ச்சி ஒன்று நடைபெறவிருக்கின்றது. அந்த நிழ்ச்சியில் பிரபல நடிகையும் அரசியல்வாதியுமான குஷ்பு கலந்துகொள்வதற்கு எதிராக சமூக வலைத்தளங்களில் பலத்த கண்டனக்குரல்கள் ஒலிக்கின்றன.

முதலில் அந்த கல்வி நிலையத்தை ஆரம்பிப்பவர் கனடாவில் வாழும் ஓர் ஈழத்தமிழர். கனடாவில் மிக உயர்ந்த நிலைக்கு சென்ற தொழில் அதிபர்களில் ஒருவர். அதுமாத்திரமன்றி அவரது மனைவி ஒரு காலத்தில் முன்னணி திரைப்பட நடிகையாக இருந்த ரம்பா.

யாழ்ப்பாணத்தில் தாம் நடத்தும் நிகழ்ச்சி ஒன்றுக்காக ரம்பா அழைத்தால் அவரது அழைப்பை அவர்காலத்தில் சினிமாவில் இயங்கிய யாரைக் கேட்டிருந்தாலும் அவர்கள் தவறாது சம்மதித்திருப்பார்கள். அதனால்தானோ என்னவோ அவர் தனது நண்பியை இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு அழைத்திருக்கலாம். அதைவிட இன்று இந்திய ஆளும் கட்சியான பாரதீய ஜனதாக கட்சியின் முக்கிய தமிழகத் தலைவர்களில் குஷ்புவும் ஒருவர். அவர் கலந்து கொள்வது ஏதாவது ஒரு வகையில் தமிழர்களுக்கு உதவுவதற்கும் வழியமைக்கலாம் என்றும் அவர் நினைத்திருக்கலாம்.

ஆனால் அவர் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று எப்போதோ ஒரு பேட்டியில் தெரிவித்தார் என்பதற்காக சிலர் 'பற்ற வைத்த' நெருப்பு இப்போது அவரை அந்த நிகழ்ச்சிக்கு அழைப்பதை நிறுத்துமளவிற்கு சென்றிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் பற்றிய குஷ்புவின் அந்தக் கருத்து, அவர் காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளராக இருந்த காலத்தில் தெரிவித்தது. தனது கட்சியின் தலைவர் ஒருவரை படுகொலை செய்த அமைப்பு தொடர்பாக அவர் அந்த நேரத்தில் அப்படித் தான் செல்லியிருக்கவேண்டும் என்பதைக் கூட நம்மால் சிந்திக்க முடியவில்லை என்றால் அதனை எப்படி புரிந்துகொள்வது என்று தெரியவில்லை.

குஷ்பு தொடர்பாக இப்போது கேட்கும் கூச்சல்களை கேட்கின்ற போது அண்மையில் தமிழகம் சென்றிருந்த நமது தலைவர் ஒருவர் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அவரைச் சந்தித்து ஈழத்தில் இந்துக்களுக்கு எதிராக நடக்கும் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்கள் குறித்து விளக்கமளித்ததுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

விடுதலைப் புலிகள் தாயகத்தில் தென்னிந்திய திரைப்படங்களை தடைசெய்து வைத்திருந்த ஏக காலத்தில் புலம்பெயர் மண்ணில் அதனை எவ்வாறு பயன்படுத்தினர் என்பதை முன்னுதாரணமாக கொண்டு நம்மவர்கள் சிந்திக்க வேண்டும்.! அவரைச் சந்தித்த அந்தத் தலைவர் போல!!.

**-ஊர்க்குருவி.**

# யாழ்ப்பாணத்தில் பணம் கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 20

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகப் பணம் கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களில் வெகுவாக அதிகரித்துள்ளன எனவும், அது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்களே மோசடியில் ஈடுபடுகின்றனர் யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த மாதம் மட்டும் இவ்வாறான 10 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

சுமார் 6 கோடி ரூபா வரையில் மோசடி செய்யப்பட்டுள்ளமை இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறைப்பாட்டாளர்களும் பல லட்சங்களை மோசடியாளர்களிடம் இழந்துள்ளனர்.

சமூக வலைத்தளங்களிலும், குழுக்களிலும் பகிரப்படும் விளம்பரங்கள் தொடர்பாகப் பொது மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும், பயண முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்கள் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்டவர்களா என்பதைப் பொது மக்கள் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம் - என்றார். (அ)

# இலங்கைத் தீவை தன் ஆளுமையால் தற்காத்தவர் ஜனாதிபதி ரணில்தான்!

## அமைச்சர் டக்ளஸ் புகழாரம்

கொழும்பு, நவ. 20

வளர்ச்சியடைந்த நாடுகள் மட்டுமன்றி வல்லரசு நாடுகளும் கூட பொருளாதார வீழ்ச்சி கண்ட வேளை வளர்ந்து வரும் நாடாகிய இலங்கைத் தீவை தன் ஆளுமையால் தற்காத்தவர் ஜனாதிபதிபதி ரணில் விக்ரமசிங்க என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்றில் தனது கருத்துக்களை முன்வைத்து உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

தென்னிலங்கை எமக்கு தீர்வு வழங்காதென்று சுயலாபக்கூச்சலிடுவோர் இதே ஆளுமை மிக்க ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் நான்காண்டுகள் தேன் நிலவு கொண்டாடி மகிழ்ந்தனர்.

எதை அவர்கள் சாதித்தனர்? இதற்கு நீங்கள் ஆயிரம் வியாக்கியானங்கள் கொடுத்தாலும் போதிய அரசியல் பலத்தோடு இருந்தும் நீங்கள் மாபெரும் வரலாற்று தவறு விட்டதை பதிவு செய்துள்ளது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் தமது உதடுகளுக்கு தாமே சீல் வைத்துக்கொண்டவர்கள்.

இன்று அரசாங்கம் நல்லிணக்கத்திற்கு சீல் வைத்திருக்கிறது என்று சுதந்திரமாக பேசுகிறார்கள். நல்ல மாற்றம். வரவேற்கிறேன். சமாதானத்திற்கான



கதவுகளை அரசாங்கம் இறுக மூடியிருப்பதாக சொல்கிறார்கள்.

பாவம் அவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள் செவியிருந்நதும் செவிடர்கள் கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார் செவியிழந்த மனிதர் முன்னே பாடலிசைத்தார். எத்தனை வாய்ப்புகள் கிடைத்தும் அத்தனையும் பன்றிக்கு முன்னால் வீசப் பட்ட முத்தாக போய்விட்டன.

இலங்கை இந்திய ஒப்பந்தம். இதை ஏற்றுக்கொண்ட ஒரு கட்சியின் காலில் விழுந்து இடுப்பை பிடித்து மெல்ல எழுந்து கழுத்தை நெரிக்கும் அந்த வாத்தியார் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட ஒருவராகவே பார்க்கப்படுகிறார்.

தென்னிலங்கை இறுக பூட்டி வைத்திருக்காம் ஒப்புக்கொள்ளலாம் அது இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முந்திய வரலாறு.

சந்திரிகா அம்மையார் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை விட பல மடங்கு முன்னேற்றகரமான தீர்வை முன் வைத்த போது இந்த வாத்தியார் இன்று தொத்தி ஏறியிருக்கும் கட்சி அன்று அதை எதிர்த்து கொழும்பில் ஊர்வலம் போனது.

எந்த அடிப்படையில் போனீர்கள்?

அப்போது இந்த வாத்தியார் தன் கண்களுக்கும் காதுகளுக்கும் சீல் வைத்துக் கொண்டிருந்தாரா? அல்லது கட்டாயப் பயிற்சியில் விறகுக்கட்டை ஏந்திக் கொண்டிருந்தாரா? ஜனாதிபதி அவர்கள் மக்களுடன் பேசி பிரச்னைகளைத் தீர்க்க தயாராக இருக்கின்றார். ஆகையால் பிரச்னைகளைத் தீர்க்க முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, இந்த நாட்டினை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய வழிமுறைகளையும், எமது நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையினை பேணிப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகளையும் நன்கு அறிந்தவரும் அவரே யாவார்.

அந்த வகையில்தான் 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தினை அவர் முன்வைத்திருக்கின்றார் என்பதை நான் இங்கு கூறியே ஆக வேண்டும் எனவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் எமது நாடு எத்தகைய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டு வருகின்றது என்பதை யாரும் மறந்துவிடவோ, மறுத்துவிடவோ முடியாது.

இந்த நாடு, சூழ்ச்சிகரமான இக்கட்டு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த கால கட்டத்தில், இந்த நாட்டினைப் பொறுப்பேற்க எவருமே முன்வராத நிலையில், தைரியமாக முன்வந்து இந்த நாட்டினைப் பொறுப் பேற்ற ஒரேயொரு தலைவர் எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க-என்றார். (அ)

# நிரம்பி வழியும் மட்டத்தில் தெதுரு ஓயா நீர்த்தேக்கம்

கொழும்பு, நவ. 20

தெதுரு ஓயா நீர்த்தேக்கம் நிரம்பி வழியும் மட்டத்தை அடைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, இதன் காரணமாக வாரியபொல, நிகவெரெட்டிய, மஹவ, கெபோய்கனே, பிங்கிரிய, சிலாபம் ரஸ்நாயக்கபுர, ஆராச்சிக் கட்டுவ மற்றும் பல்லம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் சிறிதளவு வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

Eelanadu
20.12.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## ஏன் ஐக்கியம் தேவை?

நீண்ட காலத்திற்கு பின்னர் தமிழ் தேசியவாத அரசியல் பின்புலத்தில் இயங்கும் கட்சிகள் அனைத்தும் ஒரே குடையின் கீழ் வரவேண்டும் என்னும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பலவும் தோல்விடைந்திருகின்ற நிலையில், வடக்கு, கிழக்கு சிவில் சமூகம் இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கின்றது. மக்கள் முறைப்பாட்டுக்கான குழு எனப்படும் - சிவில் சமூக குழுவானது - அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கும் - ஆகக் குறைந்தது, தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தி சில விடயங்களில் பொது உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்னும் கோரிக்கை முன்வைத்திருந்தது. நீண்ட காலத்திற்கு பின்னர் பிரதான கட்சிகள் அனைத்தும் இந்த சந்திப்பில் பங்குகொண்டிருந்தன. இந்த ஒற்றுமை முயற்சியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பங்குகொள்ளவில்லை.

தமிழ் கட்சிகளிடையே எவ்வகையான ஐக்கியம் தேவை என்னும் விவாதங்கள் ஏராளமாக நடந்திருக்கின்றது. கொள்கை அடிப்படையிலா அல்லது தந்திரோபாய அடிப்படையிலான ஐக்கியமா சாத்தியம் - என்றவாறான விவாதங்கள் தமிழ்ச் சூழலில் உண்டு. ஆனால் கொள்கையடிப்படையிலான முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை - மாறாக சில இடங்களில் தந்திரோபாய அடிப்படையிலான ஐக்கிய முயற்சிகள் வெற்றியளித்திருக்கின்றன. இந்த பின்புலத்தில் முதலில் தந்திரோபாய ஐக்கியமே சாத்தியமானது. அவ்வாறு தந்திரோபாய அடிப்படையில் ஏற்படுத்தப்படும் அரசியல் கூட்டை, பின்னர் கொள்கை அடிப்படையிலான பரந்த கூட்டணியாக ஆக்கிக்கொள்ள முடியும்.

இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கட்சிகள் பெரியளவிலான பின்னடைவுகளை சந்தித்திருந்தது. இந்த அனுபவம் எதனை உணர்த்துகின்றது? கட்சிகள் தொடர்ந்தும் பிரிந்து சென்று தேர்தலை எதிர்கொள்வதா அல்லது சூழ்நிலையை கருத்தில் கொண்டு தந்திரேபாயமாக ஓரணியாவதா? எது சரியான உபாயமாக இருக்க முடியும்?

தற்போதுள்ள நிலையில் தமிழ் மக்களின் ஜனநாயக பிரதிநித்துவம் ஒன்றுதான் தமிழ்மக்களின் ஒரேயொரு பலமாக இருக்கின்றது. ஆனால் தமிழ் தேசிய கட்சிகள் சில தந்திரோபாயமான தீர்மானங்களை எடுக்காவிட்டால், அந்த நிலையும் கேள்விக்குள்ளாகும். தமிழ் தேசிய அரசியலை ஒரு திரட்சியாக பேணிப் பாதுகாக்க வேண்டுமென்றால், வடக்கு கிழக்கின் அனைத்து தமிழ் பிரதிநிதித்துவங்களும் முடியுமானவரையில் தமிழ் தேசிய கட்சிகளின் வசமாக வேண்டும். அது ஒன்றின் மூலம் தான் குறிப்பிட்டளவாவது பேரம் பேசும் பலத்தை ஒருங்கிணைக்கலாம். பிரதிநிதித்துவம் சிதறுமாக இருந்தால், அதன் பின்னர் தேசத்தை கட்டியெழுப்பும் அடிப்படையிலான விவாதங்கள் பயனற்றது.

தமிழ் மக்கள் மத்தியில் வீழ்சியுற்றுச் செல்லும் நம்பிக்கையை மீளவும் புத்துயிர் பெறச் செய்வதிலும் இவ்வாறான ஐக்கியம் பெரியளவில் செல்வாக்குச் செலுத்தும். கடந்த காலத்தில் கூட்டமைப்பை மக்கள் பெரியளவில் ஆதரித்தமைக்கு பின்னால், அது ஒரு கூட்டாக இயங்குகின்றது என்னும் மக்கள் உளவியலும் செல்வாக்குச் செலுத்தியது.

கூட்டமைப்பிற்குள் நிலவிய உள் முரண்பாடுகள் தீவிரமடைந்து சென்றதும், அதன் மீது பொதுவெளிகளில் விமர்சனங்கள் அதிகரித்தமையும் அதன் வீழ்ச்சியில் பிரதானமாக செல்வாக்குச் செலுத்தியது. இந்த நிலையில் மீண்டும் தமிழ் தேசிய கட்சிகள் ஐக்கியமடைந்து, ஒரு பொது இணக்கப்பாட்டிற்குள் வந்த செய்தி மக்கள் மத்தியில் செல்லுமாயின், மக்கள் மீளவும் உணர்வுகள் ஒருமிக்கும். அது தேர்தல் வெற்றியை பன்மடங்காக்கும். ஐக்கியப்பட்ட தேர்தல் வெற்றிதான், பல்வேறு வழிகளிலும் ஒரு ஐக்கிய முன்னணியை உடனடியாக தாங்கிநிற்கும். கொள்கை அடிப்படையில் அவ்வாறான நகர்வை செய்வது கடினமானது.

### வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

“இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்.”

**மிகைல் கோபர்ச் சேவ் (சோவியத்யூனியனின் முன்னாள்அதிபர்)**



# ராஜபக்ஷக்களிடம் நட்டஈட்டை பெறுவதற்கு சட்ட நடவடிக்கை!

*சுமந்திரன் தலைமையில் எதிரணி சட்டத்துறையினர் ஆராய்வு*

*கொழும்பு, நவ. 20*

நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்திற்கும், சீரற்ற நிதி நிர்வாகத்திற்கும் ராஜபக்ஷ குடும்பத்தினரும், அவர்களது சகாக்களும் காரணமாக இருப்பதும் அவர்கள் அதற்கான பொறுப்பினை கூற வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில் சாதாரண மக்களுக்கான நட்ட ஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்காக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது சம்பந்தமாக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் எம்.பி தலைமையில் எதிர்க்கட்சிகளின் சட்டத்தரணிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

முன்னதாக, நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்திற்கும், சீரற்ற நிதி நிர்வாகத்திற்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ , பஸில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், டபுள்யூ.யு.டி. லக்ஷ்மன், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, முன்னாள் ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தர மத்திய வங்கியின் நிதிச் சபை ஆகிய தரப்புக்கள் “பொறுப்புக்கூற வேண்டும்“ என்று உயர்நீதிமன்றில் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடர்பில் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதனையடுத்தே பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களிடத்தில் இருந்து நட்ட ஈட்டைப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது பற்றி ஆராயப்படுகின்றது.

இதுதொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்-

நாட்டை பொருளாதார ரீதியாக சீரழித்தமைக்காக பொறுப்புக்கூற வேண்டியவர்களாக ராஜபக்ஷக்கள் உயர் நீதிமன்றத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையானது மிகவும் முக்கியமான விடயமாகும்.

ஆனால் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், அவர்களிடமிருந்து நட்ட ஈட்டைப் பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குதல் சம்பந்தமாக எவ்விதமான உத்தரவுகளும் விடுக்கப்படவில்லை.

இருப்பினும், பொறுப்புக்கூறலில் இருந்து விலகியமையால், அதற்கான இழப்பீட்டை பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செலுத்த வேண்டும் என்பதற்கான உயர்நீதிமன்றம் ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான வழக்கில் தீர்ப்பளித்துள்ளது.

அந்த வழக்கின் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு எனது தலைமையில் ஏனைய எதிர்க்கட்சிகளின் சட்டத்தரணிகள் மற்றும் சிவில் தரப்பினர் உள்ளிட்டவர்களுடன் ராஜபக்ஷக்களிடத்திலிருந்து நட்டஈட்டைப் பெறுவதற்கான சட்ட நடவடிக்களை அடுத்து வரும் காலத்தில் முன்னெடுப்பது பற்றிய ஆராய்ந்து வருகின்றோம்.

விசேடமாக, ராஜபஷக்ஷக்களை பொறுத்தவரையில் 22மில்லியன் மக்களுக்கும் நட்டஈடு வழங்குமளவிற்கு நாட்டுக்கு வெளியில் போதுமான பணம் இருக்கின்றது. அதற்கான சான்றதாரங்களும் காணப்படுகின்றன.

அதனடிப்படையில் ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டிற்கு வெளியே வைத்திருக்கும் பணத்தில் இருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும்.

நாட்டிற்கு வெளியே வைத்துள்ள அனைத்து பணத்தையும் மீண்டும் கொண்டு வர முடியும். அந்த பணத்தில் தான் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்க பட்ட மக்களுக்கான நிவாரணத்தினையும் வழங்கமுடியும் என்பதே எமது சட்ட நடவடிக்கைக்கான முயற்சியின் நோக்கமாகவுள்ளது - என்றார்.

# முல்லைத்தீவில் போதைப்பொருள் மீட்பு


*முல்லைத்தீவு, நவ. 20*

முல்லைத்தீவு - முள்ளியவளை கணுக்கேணி பகுதியில் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்றபோது, சந்தேக நபர்கள் போதைப் பொருள்களை போட்டுவிட்டு தப்பி ஓடியநிலையில், குறித்த இடத்திலிருந்து பொதிசெய்யப்பட்ட 4 கட்டு ஹெரோயினுடன் 4 கிராம் குடு போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்டுள்ள போதைப்பொருட்கள் முள்ளியவளை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

**நவம்பர் - 20 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - கார்த்திகை 04**
**நல்ல நேரம் : 06.00 - 07.30**
**ராகு காலம் : 07.30 - 09.00**
**திதி : அஷ்டமி**




**மேடம்**

தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**கடகம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்**

சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். அமோகமான நாள்.

**கன்னி**

புதிய சிந்தனைகள் மனதில்தோன்றும். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பணிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**

கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். பாராட்டப்படுவீர்கள்.

# தமிழகத்தில் ஒரே கட்டமாகவே தேர்தல்

*சென்னை, நவ. 20*

தமிழகம் அமைதியான மாநிலம் என்பதால்தான், எப்போதும் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுகிறது என்று தமிழக தலைமை தேர்தல் அலுவலர் சத்யபிரதா சாஹூ கூறினார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், தமிழக தலைமை தேர்தல் அலுவலர் சத்யபிரதா சாஹூ தலைமையில் நேற்று நடைபெற்றது.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகம் அமைதியான மாநிலம். எனவேதான், எப்போதும் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுகிறது. ஒரு வாக்காளரின் பெயர் 2 இடங்களில் இடம்பெற்றிருந்தால், அவர் எங்கு வாக்களிக்க விரும்புகிறார் என்ற ஒப்புதல் பெற்ற பிறகே, மற்றொரு இடத்தில் உள்ள பெயர் நீக்கப்படும்.

தமிழகம் முழுவதும் புதிய வாக்காளர்களை சேர்க்க பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, கல்லூரிகளில் சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்படுவதுடன், இதுகுறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 18 வயது நிறைவடைந்த அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரை சேர்த்து, தேர்தலின்போது ஜனநாயக கடமையாற்ற வேண்டும்.

இவ்வாறு தமிழக தலைமை தேர்தல் அலுவலர் சத்யபிரதா சாஹூ கூறினார்.

(அ)

# ஆளுநர் திருப்பி அனுப்பிய 10 மசோதாக்கள் மீண்டும் சட்டப் பேரவையில் நிறைவேற்றம்

*சென்னை, நவ. 20*

ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட, பல்கலைக்கழகங்கள் திருத்தச் சட்டங்கள் தொடர்பான 10 மசோதாக்களும் நேற்று முன் தினம் நடைபெற்ற சட்டப் பேரவை சிறப்புக் கூட்டத்தில் மீண்டும் நிறைவேற்றப்பட்டன.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த 2020-ம் ஆண்டு முதல், பல்கலைக்கழகங்கள் தொடர்பான சட்டத்திருத்த மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன. இந்த மசோதாக்கள் ஒப்புதல் அளிக்கப்படாமல் நிலுவையில் இருந்தன. எனவே, மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க காலநிர்ணயம் செய்யக் கோரி, உச்ச நீதிமன்றத்தை தமிழக அரசு நாடியது.

இதற்கிடையே, 10 மசோதாக்களை நிறுத்தி வைப்பதாகக் குறிப்பிட்டு, ஆளுநர் ஆர்.என். ரவி கடந்த 13ஆம் திகதி தமிழக அரசுக்கு திருப்பி அனுப்பினார்.

இந்நிலையில், அந்த மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பும் வகையில், தமிழக சட்டப் பேரவையின் சிறப்பு கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், 10 சட்ட மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றி அனுப்புவது தொடர்பான அரசினர் தனித் தீர்மானத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்தார். தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் பேசியதாவது:

பதினைந்தாவது சட்டப் பேரவையில் ஆய்வு செய்து, நிறைவேற்றப்பட்ட 2 மசோதாக்கள், 16 ஆவது சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 8 மசோதாக்கள் ஆளுநரின் ஒப்புதலுக்காக உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், நெடு நாட்கள் வைத்திருந்து, நவ.13 ஆம் திகதி எந்த காரணமும் குறிப்பிடாமல் ஏற்பிசை அளிப்பதை நிறுத்திவைப்பதாக மசோதாக்களில் குறிப்பிட்டு ஆளுநர் அவற்றை திருப்பி அனுப்பியுள்ளார். காரணம் ஏதும் குறிப்பிடாமல் மசோதாக்களை ஆளுநர் திருப்பி அனுப்பியது ஏற்புடையதல்ல என்று இப்பேரவை கருதுகிறது.

அரசமைப்பு சட்டப்படி, இந்த மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஏற்பிசைவுக்காக முன்னிடப்படுமாயின், ஆளுநர் அதற்கு இசைவு அளிக்க வேண்டும் என்பதை இந்த அவை கவனத்தில் கொள்கிறது-என்றார்.

(அ)

# விஜயகாந்த் மருத்துவமனையில் அனுமதி

*சென்னை, நவ. 20*

தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காக சென்றுள்ளதாக தேமுதிக தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

நடிகரும், தேமுதிக தலைவருமான விஜயகாந்த் கடந்த சில ஆண்டுகளாகவே உடல்நலப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால், அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதில்லை. அண்மையில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அவர் குடும்பத்துடன் இருக்கும் புகைப்படங்கள் வெளியாகின. இந்நிலையில், கடந்த 2 நாட்களாக நடிகர் விஜயகாந்த்துக்கு இருமல், சளி மற்றும் தொண்டை வலியால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதன் காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றுள்ளார் என தகவல் வெளியானது. இந்த தகவல் பரவிய நிலையில், தேமுதிக தரப்பிலிருந்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தேமுதிக தலைவர் விஜயகாந்த் வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காக சென்றிருக்கிறார். ஓரிரு நாட்களில் வீடு திரும்புவார். வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தமிழகத்தில் 4 நாட்களுக்கு கனமழை!

*சென்னை, நவ. 20*

தமிழகத்தில் நேற்று முதல் 4 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்டசெய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலைகொண்டிருந்த 'மிதிலி' புயல், வடக்கு மற்றும் வடகிழக்கு திசையில் நகர்ந்து, வங்கதேச கடற்கரை அருகில் கேப்புபாராவில் கரையை கடந்தது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் இலங்கை பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும்காரைக்கால் பகுதிகளில் 19-ம் தேதி ஒருசில இடங்களிலும், 20, 21 தேதிகளில் தமிழக கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், 22 முதல் 24ஆம் திகதி வரை தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசா னது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த48 மணி நேரத்தில் வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன்கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 31 பாகை, குறைந்தபட்ச வெப்பநிலை 25 பாகை செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.

(அ)

# ஜனாதிபதியினால் நாட்டில் ஊழல்களை ஒழிக்கமுடியாது

## அநுரகுமார திட்டவட்டம்




கொழும்பு, நவ. 20

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டில் ஊழல்களை ஒழிக்க முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நுகேகொடையில் இடம்பெற்ற அரச எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியினால் மாத்திரமே இந்த நாட்டில் பொருளாதார மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

ரணில் விக்கிரமசிங்க சொத்துகளை விற்பனை செய்யும் கொள்கையை முன்னெடுக்கிறார்.

அதுவும் அதிக இலாபம் ஈட்டித்தரும் அரச நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்கிறார்.

நாட்டில் அதிக வருமானம் ஈட்டித்தரும் நிறுவனங்களில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் அடங்குகிறது.

இந்த வருடத்தில் முதல் ஒன்பது மாதங்களில் 10 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ள அந்த நிறுவனம் விற்கப்படுவதற்கான காரணம் என்ன? இவ்வாறு பல நிறுவனங்கள் பட்டியலில் காணப்படுகின்றன.

இப்போது நாட்டில் ஊழல்வாதிகளுக்கிடையே சண்டைகள் இடம்பெறுகின்றன.

எம்மைப் பொறுத்தவரையில் நல்ல ஊழல்வாதி, மோசமான ஊழல்வாதி என வகைப்படுத்த மாட்டோம்.

இந்த ஊழல்வாதிகளை ஒழிப்பதற்கு தேசிய மக்கள் சக்தியாக நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

இந்த நாட்டில் பொருளாதார வீழ்ச்சிக்கு திருட்டு, ஊழல், மோசடிகளே காரணமாக அமைந்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஊழலை ஒழிக்க முடியாது. ஏனென்றால் அவரும் ஓர் ஊழல்வாதியாவார்.

நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் இவ்வாறான ஊழல்களுக்கு எதிராக நாம் அணிதிரள வேண்டும்.-என்றார். (அ)

# இரு பஸ்கள் போட்டி போட்டு ஓடியதால் ஏற்பட்ட விபரீதம்!



கிளிநொச்சி, நவ. 20

யாழ்ப்பாணம் - மன்னார் வீதியில் பயணித்த இரண்டு தனியார் பஸ்கள் போட்டி போட்டு ஒன்றை ஒன்று முந்த முயற்சித்தபோது நிலைதடுமாறி அருகில் இருந்த மரத்தில் மோதவிருந்த நிலையில், தெய்வாதீனமாக விபத்து தவிர்க்கப்பட்டது. இதனால் நூற்றுக் கணக்கான பயணிகள் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் - முழங்காவில் பிரதான வீதி யில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட தனியார் பஸ் பயணிகளை ஏற்றிக்கொண்டு முழங்காவில்- முக்கொம்பன் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த நிலையில், பின்னால் வந்த மற்றைய தனியார் பஸ் சாரதியின் செயற்பாட்டால் நிலை தடுமாறி அருகில் உள்ள மரத்தில் மோதும் விதமாக சென்ற நிலையில் மரத்தை சூழ இருந்த மணல் திட்டு காரணமாக விபத்து தவிர்க்கப்பட்டது.

இந்த நிலையில் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பயணிகள் வேறு பஸ்ஸில் அனுப்பி வைக்கப்பட்டதுடன், பஸ்ஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (அ)

# பாரவூர்தியுடன் பஸ் மோதியது!

## மூவர் காயம்!!




வவுனியா, நவ. 20

வவுனியா - ஓமந்தையில் பாரவூர்தியுடன், இ.போ.ச பேருந்து ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியதில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

யாழில் இருந்து வவுனியா நோக்கி சென்ற பாரவூர்த்தியின் மீது, யாழில் இருந்து கண்டி நோக்கி பயணித்த இ.போ.ச பேருந்து மோதியதில் பாரவூர்தி குடைசாய்ந்தது.

விபத்தில் பாரவூர்த்தியில் பயணித்த சாரதி மற்றும் நடத்துநர் காயமடைந்துடன், பேருந்தில் பயணித்த பிரயாணி ஒருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# காணாமல் போன நால்வர் மீட்பு

கொழும்பு, நவ. 20

மாரவில - முதுகட்டுவ பகுதியில் மீன்பிடிப்பதற்காக கடலுக்கு சென்று காணாமல் போயிருந்த ஜப்பானிய பிரஜை உள்ளிட்ட 4 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடற்படையினரும் குறித்த பகுதியில் உள்ள மீனவர்களும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின்போது அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஜப்பான் பிரஜை உள்ளிட்ட 6 பேர் மீன்பிடிப்பதற்காக படகொன்றில் கடலுக்கு சென்றுள்ளனர்.

இதன்போது, நேற்று முன்தினம் பெய்த அதிக மழை காரணமாக குறித்தப் படகு கவிழ்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, படகை செலுத்தியவர் உட்பட இருவர் பாதுகாப்பாக கரைக்கு வந்துள்ளனர். (அ)

# ராஜபக்ஷக்களுக்கு அரசு சலுகை வழங்கக்கூடாது!

## முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை

கொழும்பு, நவ. 20

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் என நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டவர்களுக்கு அரச சலுகைகள் வழங்கப்படக்கூடாது எனக் கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை கையளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு சென்ற அவர், அங்கு அதிகாரி ஒருவரிடம் அந்தக் கடிதத்தைக் கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

'நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் என முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டோர் உயர் நீதிமன்றத்தினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உத்தியோக பூர்வ வாசஸ்தலம், பாதுகாப்பு உள்ளிட்டவை அரச செலவில் வழங்கப்படுகின்றன.

இவை அனைத்தும் பொது மக்களின் வரிப்பணத்தின் ஊடாகவே வழங்கப்படுவதை நாம் மறுக்க முடியாது.

பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு பொது மக்களின் பணத்தின் ஊடாக சலுகை வழங்க முடியாது.

ஆதலால் அவ்வாறான சலுகைகளை நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

அத்துடன் நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம் -என்றார். (அ)

# கிரிக்கெட் ஊழல்வாதிகளுடன் கட்சிகளில் சிலருக்கும் தொடர்பு!

## அஜித் பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 20

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் தொடர்புடைய ஊழல்வாதிகள் மத்தியில் பல்வேறு அரசியல் கட்சிகளை சார்ந்தவர்கள் இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் மிகப்பெரிய ஊழல்வாதிகள் இருக்கிறார்கள்.

இதனை நாம் பல தடவைகள் கூறியுள்ளோம்.

இப்போது பல விடயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

அவ்வாறான ஊழல்வாதிகள் மத்தியில் பல்வேறு அரசியல் கட்சிகளை சார்ந்தோரும் இருக்கின்றனர்.

எமது கட்சியில் ஊழல்வாதிகளுடன் தொடர்புடையவர்கள் இருப்பார்களேயானால் அவர்களை உடனடியாக கட்சியை விட்டு நீக்குவதற்கு நாம் தயங்க மாட்டோம்.

அவர்களுக்கு கட்சியில் எந்தப் பதவியும் வழங்கப்போவதில்லை.

இலங்கை கிரிக்கெட்டில் ஊழல் இந்தளவு பாரதூரமாக மாறியிருக்கும் என நாம் நினைக்கவில்லை.

மேலும், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் என உயர்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவர்களில் ஒருவரது பிறந்தநாள் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டுள்ளார்.

அவ்வாறெனின் அவர் மக்களின் வேதனைகளை அறிந்தவர் கிடையாது.

நெருக்கடி நிலைமைக்கு அவரும் துணைபோனதாகவே நாம் கருதத்திற்கொள்ள வேண்டும்.-என்றார். (அ)

# பொருளாதார பாதிப்புக்கு யார் பொறுப்பு? நீதிமன்றம் அதை பகிரங்கப்படுத்தியுள்ளது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு



**கொழும்பு, நவ. 20**

**பொருளாதார பாதிப்புக்கு யார் பொறுப்புக் கூறவேண்டும் என்பதை உயர்நீதிமன்றம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தியுள்ளது. நீதிமன்றத்துக்கு எமது கௌரவத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**தீர்ப்பு வழங்கிய நீதியரசர்களை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அழைத்து விசாரணை செய்ய எவருக்கும் தகைமை இல்லை. பாராளுமன்ற தெரிவுக்குழு தோல்வியடைந்துள்ளது. ஆகவே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார பாதிப்புக்கு யார் காரணம் என்று இதுவரை காலமும் பேசப்பட்ட விடயத்துக்கு உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை தற்போது வழங்கியுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எமது கௌரவத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் ஆளும் தரப்பினர் மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். பாராளுமன்ற தெரிவுக்குழு ஊடாக இந்த வழக்கு விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவும், நீதியரசர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்யவும் பேசுகிறார்கள்.

நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தும் தகைமை இங்கு எவருக்கும் கிடையாது. பாராளுமன்ற தெரிவு குழுக்கள் தோல்வி என்பதற்கு பல விடயங்கள் சான்றாக உள்ளன.

நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்துக் கொண்டிருக்காமல் உரிய தரப்பினர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தினால் நாட்டு மக்கள் பாராளுமன்றத்தை கடுமையாக விமர்சிப்பார்கள். மிகுதியாக இருக்கும் கௌரவமும் இல்லாமல் போகும்.

பொருளாதார மீட்சிக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த சிறந்த திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின் பின்னர் இடைநிறுத்தப்பட்டன. அதன் சாபத்தையே இன்று அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

பொருளாதார பாதிப்பினால் சமூக கட்டமைப்பில் போதைப்பொருள் வியாபாரம், விபச்சாரம் போன்ற சமூக விரோத செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. இது சிறந்தொரு நிலையல்ல,

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் -04 நிறுவனம் வெளியிட்ட காணொளிகள் வெறும் திரைப்படமாக்கப்பட்டுள்ளன.

சனல் -4 வெளியிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (அ)

# உள்ளூராட்சி மன்றங்களில் 8400 பேருக்கு நியமனங்கள்

கொழும்பு, நவ. 20

உள்ளூராட்சி மன்றங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 8400 ஊழியர்களுக்கும் விரைவில் நியமனங்கள் வழங்கப்படும் என விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

180 நாட்களுக்கு மேல் பணிபுரியும் சாதாரண தொழிலாளர்கள் இதன் மூலம் உறுதி செய்யப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# திருநர் விழிப்புணர்வு நடைபயணம் யாழில்



யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாண திருநர் வலையமைப்பின் ஏற்பாட்டில், திருநர் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாண நகரில் விழிப்புணர்வு நடைபயணமொன்று மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் ஒன்றுகூடியவர்கள் நகரை சுற்றி நடைபயணத்தில் ஈடுபட்டனர்.

இந்த சமூகத்தில் வாழ்கின்ற அனைவரும் சமூக பொறுப்புடையவர்கள் என்பதை வலியுறுத்துவதோடு, திருநர் சமூகத்தினரை ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தாத வாழ்தலை நோக்கி ஒடுக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுப்போம், மனிதர்களை மனிதர்களாக மதிப்போம் என நடைபயணத்தில் பங்கேற்றவர்கள் வலியுறுத்தினர்.

திருநர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையால் உயிரிழந்தவர்களுக்கு இதன்போது மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ)

# யாழ். இந்துக் கல்லூரி தேசிய மட்டத்தில் சாதித்தது











யாழ்ப்பாணம், நவ. 20

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பல பிரிவுகளில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

மாணவர்கள் தனிவாத்தியம் வயலின் ஆண்கள் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம்.

வயலின்:- செல்வன். ரமணா. லயசர்மா

பக்கவாத்தியம்:- செல்வன். ந.ஜனகன்

நெறியாள்கை:- திருமதி. பா.அ.சியாமளா

திரு. க.அருளானந்தகுமார்.

இசைநாடகப் பாடல் ஆண்கள்பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம்.

செல்வன். தி.திருவர்த்தனன், செல்வன்.இ.துவாரகன், செல்வன். த.அக்சயன், செல்வன். சூ.இசைவாணன், செல்வன். க.வர்சிகன் செல்வன். லோ.சங்கவன், செல்வன். லோ.மாதங்கன், செல்வன். வா.மேகவன், நெறியாள்கை:- திரு.நா. விமலநாதன், திருமதி. பி. சபேசினி, திருமதி. ஐ. வினித்தா.

பல்லியம் ஆண்கள் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம்.

செல்வன். ர.லயசர்மா, செல்வன். கௌ.அரோசன், செல்வன். ந.ஜனகன், செல்வன். ப.அகரன், செல்வன் கா.பவிசான், செல்வன். கு.நுகேஷ், செல்வன். ந. சோபவித்யன், செல்வன். க.திவாசவன், செல்வன். கௌ.கஜதேசன், செல்வன். ர.காணாம்ருதசர்மா

நெறியாள்கை:- திருமதி. ஐ.வினித்தா, திருமதி. பா.அ.சியாமளா, க.அருளானந்தகுமார்.

அத்துடன், பழந்தமிழ் வீரன் எனும் தனி நடன போட்டியில் தேசிய மட்டத்தில் வா.மேகவன் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, புலியாட்டம் - குழு நடனத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தேசிய மட்ட பரத நாட்டிய போட்டியில் முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டது.

தரம் 9,10,11 மாணவர்களான சி.கேசிகன்,சு. வர்ஜிகன்,வா.மேகவன் ரா.பிரகாஷ்,இ.கௌதமன், ஸ்ரீ.ஹருணிஷாந்,ந.சிபிநயன்,கீ.சானுகன்,கு.ஐதுர்சயன் ஐ.மதுசாதனன் பங்குபற்றிய குறித்த புலியாட்டத்தில் ஆதித்யா ஜெயபாலன், பிரியதர்ஷினி வாகீசன் ஆகியார் நெறியாள்கை செய்திருந்தனர்.

மேற்படி நிகழ்வுகளுக்கு அணிசேர்கலைஞர்களாக நட்டுவாங்கம் - பிரியதர்ஷினி வாகீசன், குரலிசை - க.ரஜீவன்சு. வடிவாம்பிகை, மிருதங்கம் - க. திவ்யாசாகர், ஆர்மோனியம் : து.பிரசன்னன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

(அ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# நீதி நிலைநாட்டும் முயற்சிகளை ஒருபோதும் கைவிடவேண்டாம்!

## பரிசுத்த பாப்பரசர் வேண்டுகோள்



ரோம், நவ. 20

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கான, உண்மையை கண்டறிவதற்கான முயற்சிகளை ஒருபோதும் கைவிடவேண்டாம் என பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

சமீபத்தில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான இலங்கை ஆயர்கள் பேரவை பரிசுத்த பாப்பரசரை சந்தித்தவேளை அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதலிற்கான நீதி உண்மையை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை ஒருபோதும் கைவிடவேண்டாம் என பரிசுத்த பாப்பரசர் கேட்டுக்கொண்டார் என கர்தினால் தெரிவித்தார். (அ)

# தொற்று நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து விலகும் சுகாதார பரிசோதகர் சங்கம்!

கொழும்பு, நவ. 20

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளதால், எதிர்வரும் 22ஆம் திகதி முதல் தொற்று நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து விலகவுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ரொஷான் குமார இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சுக்கு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் அவற்றுக்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் இருந்து விலகி ஒரு வாரத்துக்கும் மேலாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்காத பட்சத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் தொற்று நோய் ஒழிப்பு நடவடிக்கைகளில் இருந்து விலகுவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ரொஷான் குமார தெரிவித்துள்ளார். (அ)

# சாவகச்சேரியில் சங்கிலி அறுத்துவிட்டு தப்பியோடிய வட்டக்கச்சி வாசி கைது!

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீதியில் சென்ற பெண்ணின் தங்க சங்கிலியை அறுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் பகுதியில் கடந்த 06ஆம் திகதி பாடசாலையில் இருந்து தனது பிள்ளையை வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்ற பெண் அணிந்திருந்த 2 பவுண் தங்க சங்கிலியை மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் அறுத்துவிட்டு தப்பிச் சென்றிருந்தார்.

அது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனையடுத்து, சி.சி.ரி.வி கமராவில் பதிவான காட்சியின் அடிப்படையில், மோட்டார் சைக்கிளை இனங்கண்ட பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியை சேர்ந்த இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அறுக்கப்பட்ட சங்கிலி, சங்கிலி அறுக்க பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மற்றும் அன்றைய தினம் அணிந்திருந்த உடைகள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதனை தொடர்ந்து, மேலதிக விசாரணைகளின் பின்னர் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் சந்தேக நபர் முற்படுத்தப்பட்டதையடுத்து, குறித்த நபரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (அ)

# பௌத்த பிக்குவால் தாக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 20

தெனியாய - பல்லேகம பகுதியில் பௌத்த பிக்கு ஒருவரினால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்தார்.

தெனியாய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த 37 வயதான குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த 16ஆம் திகதி தாக்குதலுக்கு உள்ளாகியிருந்த நிலையில் தெனியாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கராபிட்டிய போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# ஈழத்தின் பிரபல வீதி நாடக கலைஞர் ஏரம்பு மறைந்தார்!



யாழ்ப்பாணம், நவ. 20

விடுதலைப் போராட்ட காலத்தில் வெளியாகியிருந்த பெருமளவான திரைப்படங்கள் மற்றும் வீதி நாடகங்களில் முக்கிய பங்காற்றி நடித்த பிரபல கலைஞர் மாணிக்கம் ஏரம்பு நேற்று முன் தினம் காலமானார்.

யாழ்ப்பாணம் அராலியைச் சேர்ந்த ஏரம்பு யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே விடுதலைப் போராட்டக் கலைப்படைப்புக்களில் பங்கேற்றிருந்தார்.

காத்தவராயன் சிந்துநடைக் கூத்து, இராமர் கதை, சத்தியவான் சாவித்திரி, பண்டார வன்னியன் போன்ற யாழ்ப்பாணத்து மரபுவழிக் கூத்துக்களில் சிறந்து விளங்கிய அவர் போர்க்காலப் படைப்புகளில் தன்னை இணைத்துப் பயணித்தார்.

யாழ்ப்பாண இடப்பெயர்வின்போது வன்னிக்கு இடம் பெயர்ந்த அவர் இறுதிப்போர் முடிவுறும் வரையில் அங்கு வாழ்ந்திருந்தார்.

அதன் போது தெரு வெளி அரங்குகளில் நடைபெற்ற நாடகங்களில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்திருந்தார்.

ஜெயசிக்குறு நடவடிக்கையை சித்தரிக்கும் வகையில் இடம்பெற்ற வீதி நாடகம் ஒன்றில் ஜெயசிக்குறு சண்டியன் பாத்திரம் ஏற்று நடித்து அனைவரதும் பாராட்டைப்பெற்றிருந்த அவர் பின்னாட்களில் "ஜெயசிக்குறு சண்டியன்" என்று அழைக்கப்பட்டார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் வெளியாகிய பெருமளவான முழுநீளத் திரைப்படங்கள் மற்றும் ஏராளமான குறும்படங்களிலும் பங்கேற்று நடித்திருந்தார்.

குறிப்பாக காற்றுவெழி, உயிர்ப்பூ, கடலோரக்காற்று, காற்றுவெளி, சின்னவிழிகள், குருதிச்சன்னங்கள், அம்மா நலமா? உட்பட்ட ஏராளம் போர்க்காலப் படைபுக்களில் அவர் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரால் மதிப்பளிக்கப்பட்ட கலைஞர்களில் ஏரம்புவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏரம்பு கலைஞராக மட்டுமல்லாது சிறந்த சாரதியாகவும் விடுதலைப்புலிகள் அமைப்பின் நிதர்சனம் பிரிவில் எட்டு ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிருந்தார்.

போருக்குப் பின்னரும் அண்மையில் வெளிவந்த பல படங்களிலும் அவர் நடித்திருந்தார். அவருடைய இழப்பு ஈழத் தமிழ் மக்களின் திரைத்துறை மற்றும் அரங்கத்துறைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும் என்கின்றனர் சக கலைஞர்கள். (அ)

# கிளிநொச்சியில் மீன்குஞ்சு வைப்பிலிடும் தேசிய நிகழ்ச்சி திட்டம் நேற்று ஆரம்பம்



கொழும்பு, நவ. 20

தேசிய நன்னீர் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதுடன், உணவுப் பாதுகாப்பு மற்றும் போசனையை உறுதி செய்யவும் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தினை வளப்படுத்துவதையும் நோக்காக கொண்ட மீன்குஞ்சு வைப்பிலிடும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஆரம்பித்து வைத்தார்.

சுமார் 100 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த தேசிய நிகழ்ச்சி திட்டம் கிளிநொச்சி - புதுமுறிப்பு மீன் தொட்டிகளில் மீன்குஞ்சுகளை விட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புதுமுறிப்பு பகுதியில் பிரதேச நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தினை வலுப்படுத்துவற்காக தனியார் தொண்டு நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட மீன் தொட்டிகள் பராமரிப்பின்றி கைவிடப்பட்டு இருந்த நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைய 20 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் முதற்கட்டமாக 5 தொட்டிகள் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிளை திருடிச் சென்ற 2 மாணவர்கள் பொலிஸாரிடம் சிக்கினர்!

கொழும்பு, நவ. 20

மீகொடை, கொம்பயாஹேனேயில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றதாகக் கூறப்படும் இரு மாணவர்களை தமது பொறுப்பில் எடுத்துள்ளதாக மீகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கொம்பயஹேன பிரதேசத்தை வசிப்பிடமாகவும் கொடகம பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பவர்களுமான 16 மற்றும் 17 வயதுடைய இரு மாணவர்களே பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டவர்களாவர்.

மீகொடை பொலிஸ் நிலையத்தின் இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவொன்று கொம்பயஹேன பிரதேசத்தில் விசேட சுற்றிவளைப்புக்கு சென்றது.

இந்தச சந்தர்ப்பத்தில், சந்தேகத்துக்கிடமான வகையில் இலக்கத் தகடு இன்றி வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாகச் செல்வதைக் கண்டு, அவர்களைப் பின்தொடர்ந்து சென்று நிறுத்தி விசாரணை மேற்கொண்ட நிலையிலேயே இருவரையும் மோட்டார் சைக்கிளுடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (அ)

# சமூகங்களுக்கு இடையில் பிரிவை உண்டாக்குவோர்களை கண்டிக்க முஸ்லிம் சமூக தலைவர்கள் முன்வரவேண்டும்

## கலிலூர் ரஹ்மான் கோரிக்கை



**மட்டக்களப்பு, நவ. 20**

**தமிழ் மக்களின் பாரம்பரியமும், கலைநயமும் மிக்க பரதத்தை ஆண்களை மகிழ்விக்கும் விதமாக பரதநாட்டியம் ஆடப்படுவதாகவும், விலைமாதர்கள் ஆடும் நடனமாகவும் கொச்சையான வார்த்தைகளை கொண்டு ஒழுக்கங்கள் இன்றி கடும்போக்காக அப்துல் ஹமீட் ஸராயி மௌலவி அவர்கள் பேசியிருக்கும் அந்த விடயங்களை நான் வன்மையாக கண்டிக்கிறேன் என ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்,

இஸ்லாமியர்களினால் பல நூற்றாண்டுகளாக கடைபிடித்து வந்த பாரம்பரியமிக்க கலாச்சார, கலை, இலக்கிய மரபுகளை பிழைகண்டு அவற்றுக்கு எதிராக பேசி ஒழித்துக்கட்டி பாடசாலைகளில் சினிமா திரைப்படங்களின் குத்துப்பாடல்களை ஒலிபரப்பிக்கொண்டு பாடசாலை விசேட தினங்களில் ஆசிரியர்கள் நடனமாட இப்படியான உலமாக்களே கடந்த காலங்களில் காரணமாக அமைத்துள்ளார்கள். இதனால் எது எமது கலாச்சாரம் எது அந்நிய கலாச்சாரம் என்று அடையாளம் தெரியாமல் தமது ரசனைக்கு விருந்தானவற்றை செய்து ஆசிரியர்கள் மாணவர்களை மகிழ்வித்து கொண்டிருக்கிறார்கள்.

ஆசிரியர்களும் மாணவர்களுக்கு ஒழுக்கமான விடயங்களை போதிக்காமல் இப்படி பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டு ஆடியது கண்டிக்கத்தக்கது. இந்த சினிமா பாடல்களுக்கான நடனங்களை தமிழர்களின் பாரம்பரியமிக்க பாரத நாட்டியமாக விடயம் தெரியாமல் அப்துல் ஹமீட் ஸராயி மௌலவி பேசியிருக்கிறார். எதையோ பற்றி பேசவேண்டி விளைந்து ஹிந்துக்களின் மனதை புண்படுத்தும் விதமாக பரதநாட்டியத்தை ஆண்களுக்கு உணர்வை தூண்டும் நடனமாக பேசியுள்ளார். இந்த விடயமாக இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இது விடயமாக பொலிஸார் சுயாதீன விசாரணை செய்து குறித்த உலமாவுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறான உலமாக்களை பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், ஊடகங்கள், மதரஸாக்கள் போன்றவற்றில் மார்க்க பிரச்சாரம் செய்ய அல்லது கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட கல்வி அமைச்சு, புத்தசாசன அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு போன்றன நடவடிக்கை எடுக்கவேண்டும். மன்னிப்பு கேட்டதாக அவர் வெளியிட்ட காணொளியில் கூட அவர் தொடர்ந்து அந்த கருத்தை வலியுறுத்தியுள்ளார். தெரியாமல் செய்த குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கும் விடய மறிந்தவர்கள் செய்யும் தவறுக்கு மன்னிப்பு வழங்குவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு.

ஏனைய இனங்களின் மதகுருக்கள் எமது மார்க்கம் தொடர்பில் ஏதாவது பிழையான கருத்துக்களை முன்வைத்தால் கொதித்தெழும் இலங்கையின் உலமாக்கள், அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் தலைவர்கள், மத தலைவர்கள் இந்த விஷயத்தில் மௌனம் காத்திருப்பது கவலையளிக்கிறது.

பிற சமூகங்களுடன் நல்லிணக்கமாக வாழ கற்றுத்தந்த மார்க்கத்தை பின்பற்றும் நாம் எமது சமூக உலமாக்கள் பிழைவிட்டாலும் அதை சுட்டிக்காட்டவேண்டியது எமது கடமையாக உள்ளது. இதை செய்யாது மௌனம் காப்பது ஏனைய சமூகங்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பில் பிழையான விம்பத்தை உருவாக்கும்.

இப்படியான மௌனமான போக்குகள் எதிர்காலத்தில் எமக்கு பாதகமான சூழ்நிலையை உருவாக்கும் இதனை தவிர்க்கும் வகையில் உலமாக்கள், அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், மத தலைவர்கள் இந்த விடயத்தில் குரலெழுப்ப வேண்டும்- என்றார். (அ)



# காரைதீவில் களை கட்டிய சூரசம்ஹாரம்

காரைதீவு, நவ. 20

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த சூரசம்ஹார நிகழ்வு ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் நேற்று முன் தினம் மாலை சிறப்பாக நடைபெற்றது.

சூரசம்ஹார நிகழ்வு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஆலயப பரிபாலன சபையினர் சூரசம்ஹார நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஆலய சுற்று வளாகத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ சுமார் மூன்று மணி நேரம் கடும் சமர் இடம்பெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணத்துடன் . கந்தசஷ்டி விரதம் நிறைவு பெற்றது. (அ)

# மாணவர்களுக்கு வரவேற்பு



மட்டக்களப்பு, நவ. 20

அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற தமிழ்மொழித்தின நடனப் போட்டியில் கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய மாணவர்கள் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளனர்.

பாடசாலைக்கும் கோட்டைக் கல்லாறு கிராமத்துக்கும் பெருமை தேடித்தந்துள்ள மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை நிர்வாகமும் கிராம மக்களும் பாண்ட் வாத்தியம் முழங்க வரவேற்கும் நிகழ்வு கடந்த சனிக் கிழமை நடைபெற்றது. (அ)

# கல்முனை மாநகர விடயம் பிரசன்ன-ஹரீஸ் சந்திப்பு

கல்முனை, நவ. 20

முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பாராளுமன்ற வரவுசெலவு திட்ட விவாதத்தில் உரையாற்றிமைக்கு இணங்க கல்முனை நகர அபிவிருத்தி தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸுடன் முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதி ஆலோசகருமான பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா, அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் ஆகியோர் கலந்து கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட கல்முனை மாநகர அபிவிருத்தித்திட்டம் மந்தகதியில் இருப்பதனால் 2024ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தினூடாக இந்த அபிவிருத்தி திட்டங்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்ததுடன் பெரியநீலாவணை, மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, மனைச்சேனையை உள்ளடக்கியதாக கல்முனை மாநகரில் பல கட்டிடங்களும், திட்டங்களும் முன்மொழியப்பட்டிருந்தாலும் கூட அவை இன்னும் செயற்படுத்தப் படாமல் இருக்கிறது என்ற விடயத்தையும் ஹரீஸ் எம்.பி அமைச்சர் பிரசன்னவுக்கு எடுத்து கூறினார்.

இது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைவரை தொடர்புகொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கல்முனை நகர அபிவிருத்தி தொடர்பிலான தற்போதைய நிலைகளையும், எதிர்கால விடயங்களையும் கேட்டறிந்து கொண்டதுடன் கல்முனை நகர அபிவிருத்தி தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உயர்மட்ட கலந்துரையாடலொன்றை நடத்தி துரிதகதியில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக இதன்போது அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உறுதியளித்துள்ளார்.

# பொத்துவில் டிப்போ தரம் உயர்த்தப்பட்டது

அம்பாறை, நவ. 20

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பணிப்புரையின் பேரில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்பின் முயற்சியில் பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவால் தரம் உயர்த்தப்பட்டது.

புதிய பொருளாதார மூலோபாயங்களை வலுப்படுத்துவதற்காக பொத்துவில் மற்றும் அறுகம்பே சுற்றுலா வலயத்தை ஒருங்கிணைத்து போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்காக பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக தரம் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பொத்துவில் பஸ் டிப்போவுக்கு போக்குவரத்து அமைச்சரினால் நவீன சொகுசு பஸ் வண்டி வழங்கி வைக்கப்பட்டதுடன் 60 மில்லியன் ரூபாய் செலவில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லும் நட்டி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்,



பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யு. டி.வீரசிங்க, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பொறியியலாளர் லலித் டி அல்விஸ், போக்குவரத்து சபையின் உயர் அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டு கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிலையில் குறித்த பஸ் டிப்போவின் துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான முதற்கட்ட நிதியாக சுமார் 60 மில்லியன் ரூபாவினை பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். முஷாரப்பின் வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# பலஸ்தீனத்தில் ஆறு வாரத்தில் பெரும் பொருளாதார நெருக்கடி

## ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை

ஜெருசலேம், நவ. 20

**இஸ்ரேலின் வான், கடல் மற்றும் தரைவழித் தாக்குதல்களினால் எதிர்வரும் ஆறு வார காலப்பகுதியில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**



ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்ட நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் அறிக்கையொன்றின் மூலம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதனால் பாலஸ்தீனத்தில் 34 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த தாக்கதலினால் இதுவரையில் காஸா பகுதியிலுள்ள 41,000 வீடுகள் கடுமையாக சேதமடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் 15 இலட்சத்துக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், 18 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# 2 கருப்பைகள், 2 குழந்தைகள் வைரலாகும் அதிசயப் பெண்!

நியூயோர்க், நவ. 20

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தை சேர்ந்தவர் கெல்சி ஹேட்சர். 32 வயதான இவருக்கு 2 கருப்பைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிறப்பிலேயே அரிய கருப்பை கொண்ட இவருக்கு காலேப் என்ற கணவரும், 3 குழந்தைகளும் உள்ளனர் .

இந்நிலையில் கெல்சி ஹேட்சர் மீண்டும் கர்ப்பம் தரித்துள்ள நிலையில், அவரது 2 கருப்பைகளிலும் 2 குழந்தைகளை சுமந்து வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை கடவுளின் ஆசீர்வாதமாகக் கருதுவதாக கெல்சியும் அவரது கணவரும் தெரிவித்துள்ளனர்.

இது மருத்துவ வரலாற்றில் அரிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது.



இந்நிலையில் ”ஒவ்வொரு கருப்பையும் வெவ்வேறு நேரங்களில் சுருங்க கூடும் என்பதால் குழந்தைகள் மணி நேரம், நாட்கள் அல்லது வாரங்கள் இடைவெளியில் பிறக்கலாம்” என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முக்கிய நகரைவிட்டு வெளியேறும்படி பலஸ்தீனருக்கு மீண்டும் எச்சரிக்கை



ஜெருசலேம், நவ. 20

தெற்கு காஸாவிலுள்ள கான் யூனிஸ் நகரிலிருந்து வெளியேறி, மேற்குப் பகுதிக்குச் செல்லும்படி பலஸ்தீனர்களுக்கு இஸ்ரேல் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தெற்கு காஸாவிலும் ஹமாஸ் படையினர்மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதைக் கோடிகாட்டுவதாக இது அமைந்துள்ளது.

“மக்களை வேறிடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தி வருகிறோம். பலருக்கும் இது எளிதானதாக இருக்காது என்று தெரியும். ஆனாலும், சண்டையில் அப்பாவி மக்கள் சிக்கிக் கொள்வதை நாங்கள் விரும்பவில்லை,” என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகின் உதவியாளரான மார்க் ரெகெவ் கூறினார்.

இதனால், இஸ்ரேல் தாக்குதலால் ஏற்கெனவே தென்பகுதிக்கு இடம்பெயர்ந்த நூறாயிரக்கணக்கானோர் மீண்டும் இடம்பெயரும் கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளனர். அவர்களுடன் கான் யூனிஸ் நகர மக்களும் வேறிடம் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் கடும் மனிதநேய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கான் யூனிஸ் நகரில் 400,000க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

அந்நகரில் வசிப்போர் உடனடியாக பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயருமாறு வியாழக்கிழமை இரவு இஸ்ரேல் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது.

நகரின் சுரங்க வழிகளிலிருந்து ஹமாஸ் போராளிகளை இஸ்ரேல் தற்காப்புப் படைகள் அப்புறப்படுத்த வேண்டியுள்ளது என்றும் ஆயினும், கட்டுமானங்கள் குறைந்த மேற்கில் அத்தகைய பெரிய கட்டமைப்புகள் இல்லை என்றும் ரெகெவ் தெரிவித்தார்.

அத்துடன், மேற்குப் பகுதிக்கு இடம்பெயரும் பொதுமக்கள் மீண்டும் இடம்பெயரத் தேவையிருக்காது என்று உறுதியளிப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும், மேற்குப் பகுதிகள் எகிப்துடனான ராஃபா எல்லைப் பகுதிக்கு அருகிலுள்ளதால் உதவிப்பொருள்கள் கூடிய விரைவில் அங்கு கொண்டுவரப்படலாம் என்றும் அவர் கூறினார்.

கடந்த அக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் போராளி அமைப்பு திடீரென இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. ஹமாஸ் தாக்குதலில் இதுவரை ஏறக்குறைய 1,200 பேர் கொல்லப்பட்டுவிட்டனர் 240 பேர் பிணை பிடிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, ஹமாஸ் அமைப்பை முற்றிலும் அழிக்கும் நோக்கில் இஸ்ரேல் தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் குண்டுவீச்சால் காஸா நகரின் பெரும்பகுதி இடிபாடுகளாகக் காட்சியளிக்கிறது. வடபகுதியிலிருந்து அனைவரையும் வெளியேறச் சொல்லி உத்தரவிட்டுள்ளதால் மில்லியன்கணக்கான பாலஸ்தீனர்கள் வீடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனிடையே, இஸ்ரேல் தாக்குதலால் மாண்டோர் எண்ணிக்கை 12,000த்தைத் தாண்டிவிட்டது என்றும் அவர்களில் 5,000 பேர் குழந்தைகள் என்றும் காஸா சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# மோல்டோவாவில் ஒஸ்ரிய அதிபரது கையை கடித்து காயப்படுத்திய நாய்!

## அரசுப் பயணத்தின் போது கவனத்தை ஈர்த்த சம்பவம்

நியூயோர்க், நவ. 20

நாய் மனிதரைக் கடிப்பது செய்தி அல்ல. நாயை மனிதன் கடித்தால் அதுவே செய்தி என்றொரு தொடர் பத்திரிகைப் பயிற்சிகளின் போது சொல்லப்படுவதுண்டு. ஆனால் - அரசுத் தலைவர் ஒருவரது நாய் மற்றொரு நாட்டின் அதிபரது கையைக் கடித்துக் காயப்படுத்திய சம்பவம் பற்றிய தகவலைச் சர்வதேச செய்தி ஊடகங்கள் வெளியிட்டிருக்கின்றன.

மோல்டோவா நாட்டின் பெண் அதிபர் மாயா சன்டு வளர்ப்பு நாய்ப் பிரியர். விபத்தில் காயமடைந்த ‘கோட்ரட்’ என்ற பெயருடைய நாயை வளர்த்து வருகிறார். ஒஸ்ரியா நாட்டின் அதிபர் அலெக்சாண்டர் வான் டெர் பெல்லனும் வளர்ப்புப் பிராணிகள் மீது - குறிப்பாக நாய்கள் மீது - அலாதியான பிரியம் உள்ளவர். நாய்களுடன் நடைப்பயிற்சி செல்வதைப் பொழுதுபோக்காக விரும்புபவர்.

கடந்த வாரம் ஒஸ்ரிய அதிபர் மோல்டாவோ நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார். மோல்டோவா அதிபரது மாளிகையின் முற்றத்தில்

இரண்டு அரசுத் தலைவர்களும் சந்தித்த நிகழ்வில் மாயா சன்டுவின் நாயை வாஞ்சையுடன் தடவ முற்பட்ட சமயம் அது கலவரமடைந்து அவரது கையில் கடித்துக் காயம் ஏற்படுத்தியது.



சிறிய காயம்தான். பெரிய செய்தியாகி சமூக வலைத்தளங்களில் காட்சிகள் வைரலாகின. அதிபர் கையில் கட்டுடன் அரசு வைபவங்களில் தோன்றினார்.

அதிகமானவர்கள் கூடும் இடத்தில் நாய்கள் கலவரமடைவது இயல்புதான்.

நான் ஒரு நாய்ப் பிரியன் என்பதைத் தெரிந்தவர்கள் இந்தச் சம்பவம் குறித்து ஆச்சரியப்படமாட்டார்கள்- என்று கூறிய அவர், மோல்டோவா அதிபரது நாய்க்குப் பொம்மை ஒன்றைப் பரிசளித்தார். அதிபர் மாயா சன்டுவும் அந்தச் சம்பவம் தொடர்பாகத் தனது சமூகவலைத் தளத்தில் வருத்தம் தெரிவித்துப் பதிவிட்டுள்ளார்.

உக்ரைனுக்கும் ரூமேனியாவுக்கும் இடையே அமைந்துள்ள மோல்டாவோ நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான வாய்ப்புகள் குறித்துத் தலைநகர் சிச்சினாவ்வில் ஒன்றுகூடிய ஒஸ்ரியா, ஸ்லோவேனியா நாடுகளின் தலைவர்கள் தமக்குள் பேச்சு நடத்தியுள்ளனர். (அ)

# 43 நாட்களாக தொடரும் காஸா-இஸ்ரேல் போர்!

ஜெருசலேம், நவ. 20

பலஸ்தீன ஆதரவு பெற்ற காஸாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே தொடர்ந்து 43 ஆவது நாளாக போர் நடைபெற்று வருகிறது.

காஸாவில் வான் வழி, கடல் வழி தாக்குதல்களைத் தொடர்ந்து தற்போது தரை வழித் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் நடத்தி வருகிறது.

இந்நிலையில், காஸாவில் போரினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 13,000-ஐ கடந்துள்ளது.

ஒக்ரோபர் 7 ஆம் திகதி முதல் இதுவரையில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



இவற்றில் 5000 குழந்தைகள் உள்ளடங்குவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், காஸாவில் 1,800 குழந்தைகள் உட்பட 3,570 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், காஸாவின் அல்-ஷிஃபா மருத்துவமனையை மூன்றாவது நாளாக இஸ்ரேல் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். (அ)

# வட மாகாணத்தின் கல்வி தரத்தை உயர்த்துவதற்கு பூரண ஒத்துழைப்பு

## ஆளுநரிடம் அதிபர்கள் சங்கம் உறுதி

யாழ்ப்பாணம், நவ. 20

**வடக்கு மாகாண கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவை சரி செய்வதற்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக வட மாகாண அதிபர்கள் சங்கத்தினர், மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் உறுதியளித்தனர்.**

வட மாகாண அதிபர்கள் சங்கத்தின் தலைவர் த. ஜெயந்தன் தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்துக்கு சென்றபோதே இவ்வாறு உறுதியளித்தனர்.

வட மாகாணத்தில் அதிகரித்துள்ள பாடசாலை இடைவிலகல், பிரத்தியேக வகுப்புகளுக்கு அதிக நேரத்தை செலவிடுதல், இணை பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பு குறைந்திருத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் தனது கவலையை வெளியிட்ட ஆளுநர், இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் எனவும் கூறினார்.

மாணவர்கள் மீது அதிக அழுத்தங்களை பிரயோகிப்பதால், அவர்கள் மனநிலை ரீதியாக பாதிக்கப்படுவதாகவும், வாழ்க்கையின் அடுத்த நகர்வுக்கு அது இடையூறாக அமைவதாகவும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஆகவே, பாடசாலை கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதோடு, இணை பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதன் பின்னர், வட மாகாண அதிபர்கள் சங்கத்தினர் ஆளுநரின் ஆலோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததோடு, இவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

அத்துடன் வட மாகாண கல்வி மேம்பாட்டை முன்னெடுப்பதற்கு தேவையான 19 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினையும் அதிபர்கள் சங்கத்தினர் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் கையளித்தனர். (அ)

# வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் சூரசம்ஹாரம



யாழ்ப்பாணம், நவ. 20

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் கந்தசஷ்டி உற்சவத்தின் சூரசங்கார நிகழ்வு நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இதன் போது முல மூர்த்திக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று வசந்த மண்டப பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

பின்னர் முருகப் பெருமான் உள்வீதியூடாக வலம் வந்து பின்னர் வெளிவீதியுலா வந்து சூரனுடன் போர் புரிந்துள்ளார்.

இந்த உற்சவத்தினை காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ்ந்தனர். முருகப் பெருமானை தரிசித்த பக்தர்கள் இஷ்ட சித்திகளை பெற்றுச் சென்றனர். (அ-2)

# மின்சாரம் தாக்கி இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 20

ஹாலிஎல ரொக்கத்தன்ன பகுதியில் காட்டுக்குள் மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் நபர் ஒருவரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த நபர் 22 வயதுடைய ரொக்கத்தன்ன நடுப்பிரிவு தோட்டத்தை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த நபர் தனது வீட்டுக்கு கீழ் பகுதியில் உள்ள காட்டு பிரதேசத்தில் பன்றிகளை வேட்டையாடுவதற்காக மின்சார வேலியை அமைப்பதற்காக சென்ற வேளையில் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் காட்டுப் பகுதிக்கு சென்று மிக நீண்ட நேரமாக வீடு திரும்பாதமையினால் குறித்த காட்டுப் பகுதியில் தேடுதலை மேற்கொண்ட உறவினர்கள் குறித்த நபர் உயிரிழந்த நிலையில் நேற்று காலை காணப்பட்டதை அவதானித்துள்ளனர். உடன் ஹாலிஎல பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதன் போது சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்து விசாரணைகளை மேற்கொண்டு ஹாலிஎல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அனர்த்தம்

பதுளை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்த கடும் மழையின் காரணமாக மாவட்டத்தில் உள்ள பிரதான வீதிகள் பலவற்றில் மண் சரிவு அனர்த்தங்கள் ஏற்பட்டு பொது போக்குவரத்து பாதிப்படைந்துள்ளதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ஈ.எம்.எல். உதயகுமார தெரிவிக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்: நேற்று பிற்பகல் வேளையில் பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை, ஹல்துமுல்ல, வெளிமடை, ஹாலிஎல மற்றும் பசறை பகுதிகளில் கடுமையான மழைவீழ்ச்சிப் பதிவாகியது. இதன் காரணமாக பதுளை- வெளிமடை பிரதான வீதியின் புகுல்பொல பகுதியில் மண்மேடுகளுடன் கற்பாறைகளும் சரிந்து பிரதான வீதியில் வீழ்ந்துள்ளதால் வீதியின் பொது போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

பாதையை சீர்செய்வதாக வீதி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர். ஹாலிஎல- கந்தேகெதர வீதியில் கீரியகொல்ல பகுதியில் வீதியில் மண்மேடு சரிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. எனினும் அப்பாதை தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது. ஹாலிஎல நகரின் சில பகுதிகளில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாக மின் கம்பங்கள், தொலைபேசி கம்பங்கள் என்பன சரிந்து மின்சாரத் துண்டிப்பும் ஏற்பட்டது. எனினும் அவை துரிதமாக சீர்செய்யப்பட் டுள்ளன. இதேவேளை அப்புத்தளை- காஹகொல்ல வீதியிலும் மண்மேடு சரிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஹாலிஎல பகுதியில் சில வீடுகளும் கடும் மழையினால் சேதமடைந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. பதுளை மாவட்டத்தில் தொடர்ந்தும் கடும் மழை பெய்யும் வானிலையே காணப்படுகிறது. (அ)

# பொலிகண்டியில் 9 குடும்பங்கள் கடும் மழையினால் இடம்பெயர்வு

வடமராட்சி, நவ. 20

நாட்டில் தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக பெய்து வரும் கன மழையினால் ஏற்பட்ட வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்ததில் பொலிகண்டி பகுதியை சேர்ந்த 9 குடும்பங்கள் பொதுநோக்கு மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ள நிலையில் 52 குடும்பங்களை சேர்ந்த 195 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவினரது தகவலில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 15ஆம் திகதி வரையான நிலவரத்தின் அடிப்படையில் 52 குடும்பங்களைச் சேர்ந்த 195 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

பருத்தித்துறை கிழக்கு ஜே/403 பிரிவு மற்றும் ஆதிகோவிலடி ஜே/398 பிரிவுகளில் தலா ஒவ்வொரு வீடு என்ற வகையில் இரு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பொலிகண்டி கிழக்கு பாலாவி முகாம் பகுதியில் மழை வெள்ள பாதிப்பு காரணமாக வீடுகளில் வசிக்க முடியாத நிலையில் இருந்த 9 குடும்பங்களை சேர்ந்த 36 பேர் பொலிகண்டி பொது நோக்கு மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# 196 இந்திய மீனவர்கள் 11 மாதங்களில் கைது

கொழும்பு, நவ. 20

இந்த ஆண்டு இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக 196 இந்திய மீனவர்களையும் 29 மீன்பிடி படகுகளையும் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் இரண்டு படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ் - பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தமிழகத்தின் நாகப்பட்டினம் மற்றும் காரைக்கால் பகுதிகளை சேர்ந்தவர்கள் என ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச்சென்று விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதனையடுத்து, இந்திய மீனவர்களை மயிலிட்டி துறைமுகத்தில் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# 198253 வரி செலுத்துவோர் 11 மாதங்களில் மட்டும் பதிவு

கொழும்பு, நவ. 20

இந்த ஆண்டில் இதுவரை 198,253 புதிய வரி செலுத்துபவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கோபா குழுவிற்கு அழைக்கப்பட்ட போதே இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, 18 வயதுக்கும் மேற்பட்ட சுமார் 16 மில்லியன் மக்கள் வரி செலுத்துபவர்களாக உள்ளனர்.

தற்போது சுமார் 13000 நிறுவனங்கள் வற் எனப்படும் பெறுமதி சேர் வரி செலுத்துவதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அவர்களில் பலரும் வரி ஏய்ப்பு செய்வதால், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இதற்கு முன்னர் ரமிஸ் எனும் வருமான நிர்வாக முறையைப் பயன்படுத்தி வரி வசூலை ஒழுங்குபடுத்துவதற்கு தீர்மானித்திருந்தது.

எனினும் அந்த முறையில் சிக்கல்கள் இருப்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் கோப் குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## கொக்குத்....

தூரத்திற்கு குறித்த புதைகுழியானது உள்ளது என அடையாளப்படுத்தி கொள்ள கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்ற கூற்றுப்படி 2.5 மில்லியன் வரையிலான நிதி இருப்பதாகவும் அவ் நிதி இரண்டு வாரங்களுக்கு அகழ்வுபணி மற்றும் ஏனைய பணிகளை மேற்கொள்ள போதுமானதாக இருக்கும் என அவர் மேலும் கூறினார். (அ)

## உரும்பிராய்....

பார்வையிட்டதுடன் சம்பவம் தொடர்பாக தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## போலி....

அதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழு இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

விசாரணையின் அடிப்படையில் கிளிநொச்சி மற்றும் விசுவமடுவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். போலியான அனுமதிப் பத்திரம் என்று தெரிந்தும் அதை ஒருவருக்கு வழங்கியமை, போலியான அனுமதிப் பத்திரம் என்று தெரிந்தும் அதைப் பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான அனுமதிப் பத்திரம் ஒன்றுப்பாக சுமார் 15 ஆயிரம் ரூபா வரையில் அறவிடப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

## ஆஸியின்....

போட்டியில் அவுஸ்திரேலியா அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

241 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 43 ஓவர்களில் நான்கு விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அவுஸ்திரேலியா அணி சார்பில் ட்ராவிஸ் ஹெட் 137 ஓட்டங்களையும், மார்னஸ் லாபுசான் 58 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நடப்பு உலகக் கிண்ண தொடரில் இந்தியா எந்தப் போட்டியிலும் தோல்வியை சந்தித்திராத நிலையில், இறுதிப் போட்டியில் படுதோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்திய அணி சார்பில் கே.எல் ராகுல் 66 ஓட்டங்களையும், விராட் கோலி 54 ஓட்டங்களையும் அணித் தலைவர் ரோகித் சர்மா 47 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

முதல் 10 ஓவர்களில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி பின்னர் பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது.

ஒரு கட்டத்தில் 97 பந்துகளுக்கு எந்தவொரு நான்கு அல்லது ஆறு ஓட்டங்களை அடிக்க முடியாது இந்திய வீரர்கள் தடுமாறியிருந்தனர்.

அவுஸ்திரேலியா அணியின் பந்து வீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. இந்திய வீரர்களை சிறப்பாக கட்டுப்படுத்தியிருந்தனர்.

மிச்சர் ஸ்டார்க் மூன்று விக்கெட்டுகளையும், ஜோஷ் ஹசில்வுட் இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர். (அ)

## ரணிலுடன்....

பருத்தித்துறைக் கடற்பரப்பில் இரண்டு படகுகளில் அத்துமீறி நுழைந்து, கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றத்துக்காக நேற்று முன் தினம் மதியம் 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு இராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட செய்தி இராமேஸ்வரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது.

இதேநேரம் இராமேஸ்வரத்துக்கு இரு நாள் பயணமாக இந்தியாவின் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று முன்தினம் சென்ற நிலையில், மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் நிதி அமைச்சரை நேரில் சந்தித்து கைதான தமது உறவுகளை அவர்களின் படகுகளுடன் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

மீனவர்களின் கோரிக்கையின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தொடர்பு கொண்ட இந்திய நிதி அமைச்சர், மீனவர்களின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கோரினார்.

அதனையடுத்து 22 மீனவர்களையும் கையோடு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கமைய குறித்த 22 பேரும் நேற்று அதிகாலை தமிழகத்துக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். (அ)

## கூட்டமைப்பினர்....

புலிகளும், ஜே.விபியினரும்தான் இந்நாட்டை சீரழித்தனர். ராஜபக்சக்கள்தான் இந்நாட்டை மீட்டெடுத்தனர்.

அபிவிருத்தியில் புரட்சி செய்தனர். எல்லா வீதிகளும் 'காபட்' இடப்பட்டு புனரமைக்கப்பட்டன. கிராமிய வீதிகள் புனரமைக்கப்பட்டன.

அனைவருக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது. பாடசாலைகள் கட்டியெழுப்பட்டன. இப்படி ராஜபக்ச யுகத்தில்தான் நாட்டுக்கு பாரிய அபிவிருத்திகள் இடம்பெற்றன.

மஹிந்த ராஜபக்சவுக்கு முன் இருந்த தலைவர்கள் போரை முடிவுக்கு கொண்டுவரவில்லை.

எம்மை காப்பாற்றுவதற்கு எவரும் இருக்கவில்லை.

கடவுளும் வரவில்லை. எமக்கு உயிர் தந்தது மஹிந்த ராஜபக்சதான். நாட்டை மீட்டெடுத்ததும் அவர்தான்.

எனது கிராமத்தையும் பாதுகாத்து தந்தது மஹிந்ததான். அதனால் யார் என்ன கூறினாலும் நான் அவருக்கு சோரம்போவேன்.

தலதாமாளிகை தாக்கப்படும் போதும், எல்லை கிராமங்களில் தாக்குதல் நடக்கும்போதும் நாட்டை மீட்க யார் இருந்தது? அவ்வாறு மீட்ட மஹிந்த துரோகியா? எமக்கு மூச்சு தந்த ராஜபக்சக்கள் துரோகிகளா?

மரண பீதியுடன் வாழ்ந்தவர்களுக்கு உயிர் தந்தை ராஜபக்சக்களை வீரர்கள் எனக் கூறிக்கொள்ளும்சிலர் துரோகிகள் ஆக்கியுள்ளனர். போர் காலத்தில் இந்த வீரர்கள் எங்கிருந்தார்கள் என்றே தெரியவில்லை. ராஜபக்சக்களுக்கு நான் கடன்பட்டுள்ளேன்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோதும் நாட்டை மீட்டது ராஜபக்சக்கள்தான். கொரோனாவால் மக்கள் செத்து மடியும்போது மக்களை பாதுகாத்தது ராஜபக்சக்கள், இப்படியானவர்கள் துரோகிகளா? ராஜபக்சக்கள் இல்லாவிட்டால் நானும் ஈழத்தில்தான் வாழவேண்டி வந்திருக்கும்.

மஹிந்தவின் புண்ணியத்தால்தான் சுமந்திரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆணையிறவு, வவுனியா என எல்லா பகுதிகளிலும் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றனர். துப்பாக்கி ஏந்தி இருந்த வடக்கு சிறார்களுக்கு பேனை வழங்கியது மஹிந்ததான் - என்றார். (அ)

# செலிப்ரிட்டி எட்ஜ் சொகுசு பயணிகள் கப்பல் நாட்டுக்கு




கொழும்பு, நவ. 20

செலிப்ரிட்டி எட்ஜ் என்ற சொகுசு பயணிகள் கப்பல் நேற்று பிற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

2,780 பயணிகளும், 1,273 பணியாளர்களும் இந்தியாவின் கொச்சி துறைமுகத்திலிருந்து இந்த கப்பலில் வருகை தந்துள்ளனர்.

இந்த கப்பலில் வருகைந்துள்ள பயணிகள் இலங்கையின் பல பகுதிகளுக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிளிநொச்சி....

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான போதிய ஆளணி வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாத நிலை காணப்படுகின்றது.

குறித்த மாவட்ட பொது வைத்தியசாலையானது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அப்பால் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கும் சிகிச்சை வழங்கும் ஒரு பிரதான வைத்தியசாலையாக காணப்படுகிறது.

குறிப்பாக வடக்கையும் தெற்கையும் இணைக்கின்ற ஏ-09 நெடுஞ்சாலையின் வவுனியா வைத்தியசாலையிலிருந்து சுமார் 78 கிலோ மீற்றர் தொலைவிலும் யாழ்ப்பாணத்திலிருந்து 63 மீற்றர் தொலைவிலும் அமைந்துள்ள ஒரு பிரதான வைத்தியசாலையாகவும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை காணப்படுகிறது.

இந்த நிலையில் இரண்டு மயக்க மருந்து நிபுணர்கள் இருக்க வேண்டிய நிலையில் ஒரே ஒரு மயக்க மருந்து நிபுணரும் இரண்டு சத்திர சிகிச்சை நிபுணர்கள் இருக்க வேண்டிய நிலையில் ஒரு சத்திர சிகிச்சை நிபுணரும் உள்ளதுடன் கதிரியக்க நிபுணர்கள் எவரும் இல்லாத நிலை காணப்படுகிறது.

இதனை விட எக்ஸ்ரே தொழில் நுட்பவியலாளர்கள் இரண்டு பேர் இருக்க வேண்டிய நிலையில் ஒருவர் மாத்திரமே உள்ளார். இதனால் சனி ஞாயிறு தினங்களில் மேற்படி சேவைகள் இடம்பெறுவதில்லை. இதனால் குறித்த தினங்களில் அனுமதிக்கப்படும் அவசர நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படும் நிலை காணப்படுகிறது.

ஏ -09 நெடுஞ்சாலையின் மையப் பகுதியில் அமைந்துள்ள வைத்தியசாலையில் விபத்துக்களால் காயமடைவோர் அதிகளவில் அனுமதிக்கப்படுவதனால் மேற்படி வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை காரணமாக பல்வேறு நெருக்கடிகள் எதிர்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு இந்த வைத்திய சாலையில் வெற்றிடமாக காணப்படுகின்ற வைத்திய நிபுணர்கள் மற்றும் ஏனைய வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு மத்திய மாகாண அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 2024இல்....

நடத்த 10 பில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக ஆணைக்குழு தெரிவித்திருந்ததாக அவர் நினை வூட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலம் நிறைவடைய இரண்டு மாதங்கள் உள்ள காலப்பகுதியில் நாட்டில் ஜனாதிபத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனவும் சமன்ஸ்ரீ ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதியின் பதவிக்காலம் இரண்டரை வருடங்களை கடந்ததை தொடர்ந்து, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றம் கலைக்கப்படலாமெனவும் அவர் கூறியுள் ளார்.

இதற்கான முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருப்பதாக சமன் ஸ்ரீரத்நாயக்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வட்டுக்கோட்டை....

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரே நேற்று உயிரிழந்தார்.

சித்தங்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது -25) என்பவரே உயிரிழந்தார்.

சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சந்தேக நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் உள்ளிட்ட இருவர் கடந்த வாரம் திருட்டுச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் இருவரும் நான்கு நாள்களாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படவுமில்லை - விடுவிக்கப்படவும் இல்லை என்பதனால் உறவினர்கள் அச்சமடைந்தனர்.

தாயார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளார். அதனால் சந்தேக நபர்கள் கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

பொலிஸாரின் ஆட்சேபனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

இருவரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறைக்காவலரின் காவலுடன் உயிரிந்த சந்தேக நபர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்று பரிசோதனையின் பின்னரே உயிழப்புக் கான காரணம் தெரியவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# சீனி, கீரி சம்பா தட்டுப்பாடு!

கொழும்பு, நவ. 20

சந்தையில் தற்போது சீனி மற்றும் கீரி சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

சீனிக்கு வரி விதிக்கப்பட்டதன் மூலம் சந்தையில் சீனியின் விலை அதிகரித்ததையடுத்து, அரசாங்கம் சீனிக்கான கட்டுப்பாட்டு விலையை விதித்தது.

எனினும், சந்தையில் போதுமான சீனி கையிருப்பில் இல்லை என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

எனினும், நாட்டில் சீனி தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், சீனி இறக்குமதியாளர்களுடன் நாளை விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சந்தையில் கீரி சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், கீரி சம்பா பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (அ)

# சீனி தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, நவ. 20

வரி அதிகரிப்புக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட 19,000 மெற்றிக் தொன் சீனி தற்போதும் நாட்டில் இருப்பதாகவும் அதனால் சீனி தட்டுப்பாடு அல்லது தேவையற்ற விலை அதிகரிப்பு ஏற்பட வாய்ப்பில்லை எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வலியுறுத்தியுள்ளார்.

அதன்படி, கட்டுப்பாட்டு விலைக்கு மேல் சீனி விற்பனை செய்யப்படும் இடங்களை கண்டறியும் நடவடிக்கைகளை நுகர்வோர் சேவை அதிகார சபை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சீனியை சரியான விலையில் கொள்வனவு செய்து தேவையற்ற சீனி தட்டுப்பாடு ஏற்படாமல் தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு மட்டுமல்ல, பொது மக்களினதும் பொறுப்பு என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நுகர்வோர் சேவை அதிகார சபைக்கு அறிவிக்க வேண்டியது மக்களின் கடமை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# வெள்ளத்தில் மூழ்கிய அக்குறணை



கொழும்பு, நவ. 20

மத்திய மலைநாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக அக்குறணை நகரின் ஊடாக பாயும் பிரதான நீரோடையும் துனுவில வீதி ஊடாக செல்லும் வஹகல ஓயாவும் நிரம்பி வழிகின்றன.

இதன் காரணமாக அக்குறணை நகரம் நீரில் மூழ்கியதால், ஏ- 09 வீதியின் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளம் இருந்தபோதும் பயணிக்க முற்பட்ட பேருந்து மற்றும் லொறி வெள்ளத்தில் சிக்கி, பேருந்தில் இருந்த பலர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

அக்குரணை நகருக்கு அருகில் உள்ள வீடுகளும் நீரில் மூழ்கியுள்ளன. குறித்த வீடுகளில் இருந்த பொருட்கள் அனைத்தும் நீரில் மூழ்கியுள்ளன.

ஒரு மாதத்தில் அக்குறணை நகரில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது இது ஐந்தாவது முறை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# 2024 மேயில் ஜனாதிபதித் தேர்தல் நடத்த அரச உயர்மட்டம் அவதானம்

## பொதுக் கூட்டணியில் யானை சின்னத்தில் களமிறங்கும் ரணில்

கொழும்பு, நவம்பர் 20

**2024ஆம் ஆண்டு மே மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.**

**எதிர்வரும் மே மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்தும் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படுமாயின் ஐக்கிய தேசிய மக்கள் கூட்டணி என்ற பொதுக் கூட்டணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யானை சின்னத்தில் போட்டியிடுவார் அரசாங்கத்தின் உயர்மட்ட தகவல் மூலம் தெரிவித்தது.**

இதேவேளை பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கான செலவீனங்கள் தொடர்பான அறிக்கையை தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இதன் பிரகாரம் பாராளுமன்ற, ஜனாதிபதி, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல்கள் குறித்து முழுமையான நிதி அறிக்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளர் எஸ். அச்சுதன் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தலை அடுத்த ஆண்டு நடத்துவதற்கான தீர்மானத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு - செலவு திட்ட உரையின் போது உத்தியோகப்பூர்வமாக அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தி அரசாங்கத்தில் பல்வேறு களந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. நாட்டு மக்களின் ஆதரவை ஓரணியில் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள சமர்பிக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்கும் முக்கிய வாய்ப்பாகும்.

இதனை கருத்தில் கொண்டு 2024 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ஜனாதிபதி தேர்தலையும் அதனை தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலையும் நடத்துவது குறித்து அரசாங்கத்திற்குள் நீண்ட நாட்களாக பேச்சுக்கள் தொடர்ந்தன.

அடுத்த வருடம் முதலாவது காலாண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள க.பொ.த உயர் தர மற்றும் சாதாரண தர பரீட்சைகளை கருத்தில் கொண்டு மே மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

வரவு - செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கான 10ஆயிரம் ரூபா வாழ்வாதார கொடுப்பனவு ஏப்ரல் மாத்தில் வழங்கப்படுகின்றமையினால் அதன் பலனும் ஜனாதிபதி ரணிலுக்கு கிடைக்கும்.

எனவே ஜனாதிபதி தேர்தலை 2024 ஆம் ஆண்டு இறுதி வரை காலம் கடத்தாது வருடத்தின் நடுப்பகுதியில் நடத்துவது பல்வேறு வகையில் அரசியல் நலன்களுக்கு வழிவகுக்கும் என்று ஜனாதிபதிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே மே மாத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான சூழல் குறித்து ஆராயப்பட்டுள்ளது. மறுபுறம் ஐக்கிய தேசிய கட்சியின் நிறைவேற்றுக் குழுவிலும் தேர்தல் குறித்து பேசப்பட்டுள்ளது. யானை சின்னத்தில் கூட்டணியில் களமிறங்குவது குறித்து நீண்டகால பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. அதன் பிரகாரம் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவில் உள்ள ஜனாதிபதி ரணில் ஆதரவு தரப்பினரை கூட்டணியில் இணைத் துக்கொள்வதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இதே வேளை பொதுஜன பெரமுனவின் அதிருப்தி குழுவினரால் உருவாக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாபாவின் செயல்பாட்டு தலைமைத்துவத்திலான அரசியல் கூட்டணியை ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டணிக்குள் இணைத்துக்கொள்வதற்கான பேச்சுக்கள் முக்கிய கட்டங்களில் உள்ளன. குறிப்பாக அநுர பிரியதர்ஷன யாபா தலைமையிலான கூட்டணி அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் வகையிலேயே எதிர்வரும் ஜனவரி மாதம் தனது கன்னி சம்மேளனத்தையும் நடத்த உள்ளது.

2024 வரவு - செலவு திட்டத்தின் மீதான வாக்கெடுப்புடன் தேர்தலை இலக்கு வைத்து கட்சி தாவல்களும் அரசியல் மாற்றங்களும் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கான இறுதி தீர்மானத்தை அரசாங்கம் அறிவிக்கலாம் என்று அரசின் முக்கிய தகவல் மூலம் குறிப்பிட்டது. (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக வலி. வடக்கு மக்கள் பாதிப்பு!



யாழ்ப்பாணம், நவ. 20

வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக நீடித்து வரும் சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் வலி வடக்கு பகுதியில் 33 வருடங்களாக தற்காலிக முகாம்களில் வசித்து வரும் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, பாதிக்கப்பட்ட குறித்த குடும்பங்களின் அழைப்பின் பேரில் நேற்று முன் தினம் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையிலான குழுவினர், குறித்த மக்கள் வெள்ளம் காரணமாக தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையம் உட்பட அவர்கள் வசிக்கும் முகாம்களுக்கும் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், குறித்த முகாம்களில் வசிக்கும் பல குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அக் குடும்பங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையில் உள்ள பலர் டெங்கு தாக்கத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

இதனடிப்படையில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் ஆபத்தான குடிசைகளிலும் இடிந்து விழக்கூடிய வீடுகளிலும் வசித்து வரும் மக்களின் தற்போதைய தேவை தொடர்பில் மெசிடோ நிறுவனத்தினர் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த முகாம்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மழைக்காலங்களிலும் வெள்ள பாதிப்புக்கு உள்ளாகி வரும் நிலையில் சில மக்களுக்கு காணிகள் தமது சொந்த நிலங்களை விட வேறு பகுதிகளில் வழங்கப்பட்ட போதிலும் வீடுகளை அமைப்பதற்கு அரசாங்கத்தால் இதுவரை எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை.

இதனால் புதிய இடங்களுக்கு செல்ல முடியாத நிலையில் குறித்த மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் மெசிடோ நிறுவனம் கடந்த வருடமும் மக்களின் கோரிக்கைக்கு அமைய பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கியதன் அடிப்படையில் இம்முறையும் மக்கள் தற்காலிகமாக வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்வதற்கான உதவிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# விராட் கோலியின் சாதனையை எவராலும் நெருங்க முடியாது



விராட் கோலியின் சாதனையை யாராலும் நெருங்க முடியாது என நம்புவதாக இந்திய அணியின் முன்னாள் வீரர் குண்டப்ப விஸ்வநாத் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ண முதல் அரையிறுதிப் போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக சதம் விளாசி சச்சின் டெண்டுல்கரின் முன்னிலையில் அவரது சாதனையை முறியடித்தார் விராட் கோலி.

நியூசிலாந்துக்கு எதிரான போட்டிக்கு முன்பு வரை ஒருநாள் போட்டிகளில் சச்சின் அடித்த 49 சதங்களே தனிநபர் ஒருவரின் அதிகபட்ச சதங்களாக இருந்தது.

நியூசிலாந்துக்கு எதிரானப் போட்டியில் ஒருநாள் போட்டிகளில் தனது 50வது சதத்தை விளாசி அசத்தினார் விராட் கோலி. இதன்மூலம் சச்சினின் சாதனையையும் முறியடித்தார்.

இந்த நிலையில், விராட் கோலியின் சாதனையை யாராலும் நெருங்க முடியாது என நம்புவதாக இந்திய அணியின் முன்னாள் வீரர் குண்டப்ப விஸ்வநாத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

சச்சினின் சதங்கள் சாதனையை ஒருவரால் நெருங்க முடியும் என்றால் அது விராட் கோலியால் மட்டுமே முடியும் என சில நாள்களுக்கு முன்பு கூறியிருந்தேன்.

அவர் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடிப்பார் என எதிர்பார்க்கவில்லை. அவரது சதங்கள் ஒருபுறம் இருந்தாலும், அவர் தொடர்ச்சியாக ஓட்டங்களை குவிக்கும் விதம் சிறப்பாக உள்ளது.

அவரது சிறப்பான ஆட்டத்தினால் அவரால் தொடர்ச்சியாக அரைசதங்களைக் கடந்து ஓட்டங்கள் குவிக்க முடிகிறது. சச்சினின் சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார். மற்ற வீரர்களால் விராட் கோலியின் இந்த சாதனையை நெருங்க முடியாது என நான் நம்புகிறேன்.

ஒருநாள் போட்டிகளில் ரோஹித் சர்மா 30 க்கும் அதிகமான சதங்கள் அடித்துள்ள போதிலும், விராட் கோலியின் சாதனையை நெருங்க அவருக்கு மேலும் பல சதங்கள் தேவைப்படுகின்றன. ரோஹித் சர்மாவைத் தவிர விராட் கோலியின் இந்த சாதனையை முறியடிக்க வாய்ப்புள்ள மற்ற வீரர்களை என்னால் சுட்டிக்காட்ட முடியாது -என்றார்.




## வெற்றிக்கான காரணம் என்ன?

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் மிகச் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தி வரும் மொஹமட் ஷமி தனது வெற்றிக்கான காரணம் குறித்து மனம் திறந்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரின் தொடக்கத்தில் சில லீக் ஆட்டங்களில் அணியில் பிளேயிங் லெவனில் இடம் பெறாத மொஹமட் ஷமி அதன்பின் தனக்கு கிடைத்த வாய்ப்பை மிக அருமையாக பயன்படுத்திக் கொண்டார்.

தற்போது இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக அவர் விளங்குகிறார். வெறும் 6 போட்டிகளில் விளையாடி அவர் இதுவரை 23 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

அதில் ஒரு 4 விக்கெட்டுகளும், மூன்று 5 விக்கெட்டுகளும் அடங்கும். நடப்பு உலகக் கோப்பையில் இந்திய அணிக்காக அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரராகவும் அவர் வலம் வருகிறார்.

விக்கெட்டுகள் எடுப்பது மட்டுமின்றி குறைந்த ஓட்டங்கள் எகானமியுடன் அவர் பந்துவீசியுள்ளார். அவரது பந்துவீச்சு எகானமி 5.01 ஆகும்.

இந்த நிலையில், பந்துவீச்சில் வெற்றிகரமாக செயல்படுவதன் காரணம் குறித்து மொஹமட் ஷமி மனம் திறந்துள்ளார்.

பந்துவீச்சில் வெற்றிகரமாக செயல்படுவது குறித்து அவர் பேசியதாவது,

நான் எப்போதும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பந்து வீசுவேன். விக்கெட் எப்படி இருக்கிறது.

பந்து ஸ்விங் ஆகிறதா, இல்லையா என்பதை கவனித்து பந்துவீசுவேன்.

பந்தில் ஸ்விங் இல்லையென்றால், நான் ஸ்டம்பை குறிவைத்து பந்துவீசுவேன். ஸ்டம்பை குறிவைத்து வீசும் பந்துகளை துடுப்பாட்ட வீரர்கள் விளையாட முற்படும் போது விக்கெட் கிடைக்கும் என்றார்.

உலகக் கோப்பைத் தொடர் ஒன்றில் அதிகமுறை (3 முறை) 5 விக்கெட்டுகள் வீழ்த்திய முதல் வீரர் மொஹமட் ஷமி என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணிக்கு நீண்டகால தலைவர் ஒருவர் வேண்டும்!




இலங்கை கிரிக்கெட் அணிக்கு நீண்டகால அடிப்படையிலான அணித் தலைவர் ஒருவர் நியமிப்பது குறித்து கவனம் செலுத்துவது அவசியமாகுமென இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் கிரிக்கெட் வர்ணனையாளருமான மார்வன் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நேர்காணலொன்றில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு கிரிக்கெட் அணியின் அட்டவணையை கவனமாக ஆராய்ந்து ஒரு சிறந்த திட்டத்தை உருவாக்க வேண்டும்.

அணியின் தேவைக்கு ஏற்ப தலைவரை தேர்வு செய்ய வேண்டும். மாறாக தலைவரை நியமித்துவிட்டு அணியை உருவாக்க கூடாது. அவ்வாறு செய்வதால் தான் நாம் பிரச்சினைகளை சந்திக்க நேரிடுகிறது.

தென்னாப்பிரிக்கா அணியை கட்டியெழுப்ப நீண்டகால திட்டமொன்று வகுக்கப்பட்டது. அதன் பின்னர் தான் கிரஹாம் ஸ்மித்தை நீண்டகால தலைவராக நியமித்தனர். அவ்வாறான ஒரு முடிவை நாம் எடுக்க வேண்டும்.

அணியில் சிறப்பாக செயல்பட்டவர்களைதான் கடந்த காலத்தில் தலைவர்களாக நியமித்திருந்தோம். அர்ஜுன ரணதுங்க, சனத் ஜயசூரிய, மஹேல ஜயவர்தன, குமார சங்கக்கார உள்ளிட்டவர்கள் இவ்வாறுதான் தலைவர்களாக தெரிவாகினர்.

ஆனால், தற்போது அணியின் தலைவராக நியமிப்பதற்காகவே அணிக்கு சிலர் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலைமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நேர்காணலில் கலந்துகொண்டு தலைவர் பதவி குறித்து கருத்து தெரிவித்த இலங்கை அணியின் முன்னாள் வீரர் சமிந்த வாஸ், தற்போதைய சூழ்நிலையில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் ஆகிய இரண்டிலும் இலங்கையை வழிநடத்த தனஞ்சய டி சில்வா பொருத்தமானவராக இருப்பார்.

துடுப்பாட்ட வரிசையில் தனஞ்சய டி சில்வா பல சந்தர்ப்பங்களில் அநீதியை எதிர்கொண்டுள்ளார். அவர் அணிக்குள் உள்வாங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இரண்டாம் அல்லது மூன்றாவது துடுப்பாட்ட வீரராக களமிறக்கப்பட்டார். அவர் சிறந்த துடுப்பாட்டத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனால், அவரை 5ஆம் 6ஆம் துடுப்பாட்ட வீரராக தற்போது களமிக்குகின்றனர். அவரை தலைவராக நியமித்து 4ஆவது இடத்தில் களமிறக்க வேண்டும்." என்றார்.

## நியூசிலாந்து அணியில் நீல் வோக்னர்




பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்கான நியூசிலாந்து அணியில் இடது கை வேகப்பந்து வீச்சாளர் நீல் வோக்னர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

உபாதைக்கு உள்ளாகியுள்ள மேட் ஹென்றிக்கு பதிலாக அவர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண தொடரில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் மேட் ஹென்றிக்கு காலில் உபாதை ஏற்பட்டது.

இதனால் ஏனைய போட்டிகளில் அவருக்கு ஓய்வளிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், பங்களாதேஷில் நடைபெறும் டெஸ்ட் போட்டிகளுக்காக உரிய நேரத்தில் அவர் உடல் தகுதி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், ஸ்கேன் பரிசோதனைகளில், அவர் குறித்த போட்டிகளில் பங்கேற்கும் வகையில் போதுமான அளவு குணமடையவில்லை என வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில், எதிர்வரும் 28ஆம் திகதி முதல் சில்ஹெட்டில் நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக வேகப்பந்து வீச்சாளர் நீல் வோக்னர் பங்களாதேஷுக்கு புறப்படவுள்ளார்.

# இலங்கை கிரிக்கெட்டிற்கு புத்துயிர் கொடுப்பதற்கு நீண்டகாலத் திட்டமும் ஐக்கியமும் அவசியம்



இலங்கை கிரிக்கெட்டிற்கு புத்துயிர் கொடுப்பதற்கான நீண்ட காலத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ள முன்னாள் வீரர் அரவிந்த டிசில்வா ஐக்கியம் மற்றும் இணைந்து செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஐசிசியின் நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டு இலங்கை திரும்பியவேளை விமானநிலையத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அரவிந்த டி சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி உலககிண்ண போட்டிகளில் தோல்வியடைந்தமை குறித்த கேள்விக்கு தோல்வி என்பது உலகளாவிய அனுபவம் இலங்கை அணி மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவதற்கு ஆதரவு அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுகளை சுமத்துவதையும் ஈகோவுடன் செயற்படுவதையும் கைவிட்டால் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படும் என அரவிந்தடிசில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி திறமை வாய்ந்தது எனினும் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உரிய வழிகாட்டுதல்கள் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐசிசியின் தடை குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர் இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் ஐசிசியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும் எனவும் அரவிந்த டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அல்-ஷிஃபா மருத்துவமனையின் கீழே ஹமாஸின் ரகசிய சுரங்கம் உள்ளதா?

# இஸ்ரேலுக்கு என்ன கிடைத்தது?

இஸ்ரேல் ராணுவம் - ஹமாஸ் ஆயுதக்குழுவினர் இடையிலான மோதல் ஒரு மாதத்தைக் கடந்தும் தொடர்ந்து வருகிறது. கடந்த வாரம் காஸாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிஃபா மருத்துவமனையில் இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதல் சர்வதேச கவனத்தை ஈர்த்தது.

அல் ஷிஃபா மருத்துவமனையில் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக துல்லியமான தாக்குதலை நடத்தி வருவதாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது.

அந்த மருத்துவமனையை இஸ்ரேல் ராணுவம் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் முழுவதுமாகக் கொண்டு வந்துள்ளது.

**மருத்துவமனைக்கு அடியில் சுரங்க அமைப்புகளா?**

இந்நிலையில், அல்ஷிஃபா மருத்துவமனைக்கு அடியில் ஹமாஸின் சுரங்கம் இருப்பதாகக் காட்டும் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை இஸ்ரேல் பாதுகாப்புப் படை ஹஎக்ஸ்ஹ (ட்விட்டர்) தளத்தில் வெளியிட்டிருந்தது. ஆனால் இந்தப் புகைப்படங்களை ஊடகங்களால் சுயாதீனமாக சரிபார்க்க முடியவில்லை.

“அல் ஷிஃபா மருத்துவமனை வளாகத்திற்கு உள்ளே ஹமாஸ் ஆயுதக்குழுவின் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது” என இஸ்ரேல் பாதுகாப்புப் படை எக்ஸ் தளத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்தப் பதிவில் காஸா மருத்துவமனைக்கு அடியில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் சுரங்கப்பாதையின் நுழைவு வாயிலின் காணொளியும் இணைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, காஸாவின் முக்கியமான குழந்தைகள்



மருத்துவமனையான அல்-ரன்டிசியா மருத்துவமனைக்கு அடியிலும் “மற்றுமொரு ஹமாஸ் ஆயுதக்குழுவினரின் சுரங்கத்தை” கண்டறிந்துள்ளதாகக் கூறும் இஸ்ரேல் ராணுவம், அந்த சுரங்கப் பாதையின் உள்ளே எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் புகைப்படம் ஒன்றையும் பகிர்ந்துள்ளது.

அதோடு, இதே மருத்துவமனையில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கும் காணொளி ஒன்றையும் இந்த வாரத்தின் ஆரம்பத்தில் இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டிருந்தது.

மேலும், அல்-கட்ஸ் மருத்துவமனையில் இருந்து “பெருமளவிலான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள்” கண்டெடுக்கப்பட்டதாகக் காட்டும் புகைப்படத்தையும் இஸ்ரேல் ராணுவம் சமீபத்தில் பதிவிட்டிருந்தது.

மருத்துவமனைகளுக்கு உள்ளே இருந்தும் அதன் அடியிலிருந்தும் ஹமாஸ் குழுவினர் இயங்கி வருவதாக இஸ்ரேல் கூறி வரும் நிலையில், தங்கள் கூற்றை ஆதரிக்கும் உளவுத் தகவல்களும் இருப்பதாகத் தெரிவித்து வருகிறது.

ஆனால், இஸ்ரேல் ராணுவத்தின் இந்தக் கூற்றை ஹமாஸூம் மருத்துவமனைகளின் நிர்வாகமும் தொடர்ந்து மறுத்து வருகிறது.

அல் ஷிஃபா மருத்துவமனையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இஸ்ரேல் ராணுவம், மருத்துவமனைக்கு உள்ளேயும் அதைச் சுற்றியும் தங்களது சோதனைகளைத் தொடர்ந்து வருகிறது.

**கண்டெடுக்கப்பட்ட பணயக் கைதிகளின் உடல்கள்**

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (நவ. 17) மாலை வரை, ஹமாஸ் குழுவினரால் பிடிக்கப்பட்ட பணயக்



கைதிகள் இருவரின் உடல்கள் அந்த மருத்துவமனைக்கு அருகில் உள்ள கட்டடத்திலிருந்து கண்டறியப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்தது.

கடந்த அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸ் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, இஸ்ரேலில் இருந்து 200க்கும் மேற்பட்டோரை ஹமாஸ் குழுவினர் பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

அதில் 65 வயதான யஹூடிட் வைஸ் மற்றும் இஸ்ரேல் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த நோவா மார்சியானோ இருவருடைய உடல்கள், அல் ஷிஃபா மருத்துவமனைக்கு அருகே உள்ள கட்டடத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாக இஸ்ரேல் அறிவித்தது.

இவர்களுள் நோவா மார்சியானோ உயிரிழந்துவிட்டதாக இஸ்ரேல் ராணுவம் கடந்த சில தினங்களுக்கு முன் அறிவித்தது. இந்நிலையில், அவருடைய உடலை அல் ஷிஃபா மருத்துவமனைக்கு அருகே உள்ள ஒரு வீட்டிலிருந்து கண்டெடுத்ததாக வெள்ளிக்கிழமை இஸ்ரேல் ராணுவம் அறிவித்தது.

**“அன்பான பாட்டி”**

காஸா எல்லைக்கு அருகேயுள்ள பியரி எனும் பகுதியைச் சேர்ந்த யஹூடிட் வைஸ் தன்னுடைய வீட்டிலிருந்து பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்டார்.

மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட யஹூடிட் வைஸ் அந்த நோயிலிருந்து மீண்டு வந்துகொண்டிருந்தார். ஹமாஸ் குழுவினரால் பணயக் கைதியாக பிடிக்கப்பட்டபோது அவர் தன்னுடைய மருத்துகளைக்கூட எடுத்துக்கொள்ளவில்லை என, ஹபிரிங் தெம் ஹோம் நவ்ஹ (Bring Them Home Now) என்னும் குழு தெரிவித்துள்ளது. இவருடைய உடல் 16ஆம் தேதி அல் ஷிஃபா மருத்துவமனைக்கு அருகே உள்ள கட்டடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது.

யஹூடிட் வைஸின் கணவர் ஷ்மூயெல் ஹமாஸ்




ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்டதாக, இஸ்ரேல் வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

“முழுநேரமும் அன்பான பாட்டியாக இருப்பவர்” என யஹூடிட் வைஸ் குறித்து தெரிவித்துள்ள ஹபிரிங் தெம் ஹோம்ஹ இணையதளம், கலாசாரம், விளையாட்டு, பயணம், பேக்கிங் உள்ளிட்டவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என விவரித்துள்ளது.

அவருடைய உடல் கண்டெடுக்கப்பட்ட இடத்திலிருந்து ஏ.கே. ரக துப்பாக்கிகள், ராக்கெட் மூலம் செலுத்தப்படும் கையெறி குண்டுகள் உள்ளிட்டவை கண்டறியப்பட்டதாக, இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது.

‘துரதிருஷ்டவசமாக, ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் யஹூடிட் கொல்லப்பட்டார். சரியான நேரத்தில் எங்களால் அவரைச் சென்றடைய முடியவில்லை,” என இஸ்ரேல் ராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி தெரிவித்துள்ளார். யஹூடிட் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பது குறித்த தகவல்களை அவர் அளிக்கவில்லை.

மற்றொருவரான இஸ்ரேல் ராணுவத்தைச் சேர்ந்த 19 வயதான நோவா மார்சியானாவின் உடல் இருக்கும் இடத்தை இஸ்ரேல் உளவு அமைப்பால் வழிநடத்தப்ப



டும் படையினர் துல்லியமாகக் கண்டறிந்துள்ளதாக இஸ்ரேல் ராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி தெரிவித்தார். இதையடுத்து, நோவாவின் உடல் இஸ்ரேலில் உள்ள அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஹகாரி தெரிவித்தார். நோவாவின் இறுதிச் சடங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பணயக் கைதிகள் இருவரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில், தங்களால் பிடிக்கப்பட்ட பணயக் கைதிகள் காஸா நகரத்திற்குள்ளேயே “பாதுகாப்பான இடங்கள் மற்றும் சுரங்க அமைப்புகளுக்குள்” மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

நோவா மார்சியானா எப்படி கொல்லப்பட்டார் என்பது குறித்த விவரங்களை இஸ்ரேல் ராணுவம் வெளியிடவில்லை.

ஆனால், நவம்பர் 9 அன்று இஸ்ரேல் ராணுவத்தால் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் தான் நோவா இறந்ததாக ஹமாஸின் ராணுவப் பிரிவு தெரிவித்துள்ளது. எனினும், ஹமாஸின் இந்தக் கூற்றை சுயாதீனமாகச் சரிபார்க்க முடியவில்லை.

நோவா நஹல் ஓஸ் கிபுட்ஸில் கண்காணிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, இஸ்ரேல்-காஸா எல்லை வழியாக ஹமாஸ் நடத்திய தாக்குதலில் நோவா சிக்கினார்.

தாக்குதல் நடந்த அன்று காலையில் தனது மகளுடன் கடைசியாகப் பேசியதாக நோவாவின் தாயார் அடி மார்சியானா ஒரு பேட்டியில் கூறினார்.

தான் பாதுகாப்பான இடத்தில் இருப்பதாகவும் அழைப்பைத் துண்டிக்க வேண்டும் எனவும் தன் மகள் தெரிவித்ததாக அவர் கூறினார்.

“துப்பாக்கிச் சூடு, அலறல் சத்தத்தை நான் கேட்கவில்லை. அரை மணிநேரம் கழித்து நான் அவளின் செல்போனுக்கு செய்தி அனுப்பினேன், ஆனால் அவள் பதில் அனுப்பவில்லை,” என அவர் கூறினார்.

கடந்த திங்கள்கிழமை ஹமாஸ் வெளியிட்ட காணொளியில் நோவா தோன்றினார். இதை “உளவியல் பயங்கரவாதம்” என இஸ்ரேல் தெரிவித்தது.

# 1993 ஆண்டு யாழ். புனித ஜேம்ஸ் தேவாலயத்தின் மீதான விமானக் குண்டுத் தாக்குதல்!



ருக்கி பெர்னாண்டோ




1993ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.20 மணியளவில் யாழ்ப்பாணம் குருநகரில் உள்ள புனித ஜேம்ஸ் கத்தோலிக்க தேவாலயத்தின் மீது விமானப்படைக்குச் சொந்தமான விமானத்தில் இருந்து இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. இத்தாக்குதலின்போது ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு, பலர் காயமடைந்தனர். இத்தாக்குதல் காரணமாக தேவாலயம் மற்றும் அதன் அருகில் இருந்த கட்டடங்கள் கடுமையாக சேதமடைந்தன. குறித்த தினத்தன்று காலை, புனித ஜேம்ஸ் தேவாலயத்தில் நற்கருணை வழிபாடு நடைபெறவில்லை. அதற்கருகிலிருந்த ஒரு சிறிய தேவாலயத்திலேயே புனித நற்கருணை ஆராதனை நடைபெற்றது. புனித ஜேம்ஸ் தேவாலயத்தில் அவ்வழிபாடு இடம்பெற்றிருந்தால் இன்னும் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்திருக்கவும் கூடும்.




தேவாலயத்தில் இருந்தவர்களில் சிலர் பிரார்த்தனையில் ஈடுபடவந்தவர்கள். ஏனையவர்கள் அன்று வானில் பறந்து திரிந்த இலங்கை விமானப்படை விமானங்கள் குண்டு வீசக்கூடும் என அஞ்சி தேவாலயத்தில் சரண் புகுந்தவர்கள். அந்த தேவாலயம் அவர்களுக்குப் பாதுகாப்பான இடமாக அமையும் என நம்பி அவர்கள் அங்கு வந்தார்கள். ஆனால், அவர்கள் நினைத்தது போல பாதுகாப்பானதாக இருக்கவில்லை.

கத்தோலிக்க பாதிரியாராக அபிஷேகம் பெற இருந்த ஒருவர் சம்பவத்தின் போது பாதிரியார் இல்லத்தில் இருந்ததை நினைவு கூர்ந்தார். விமானம் ஒன்று தலைக்கு மேல் பறக்கும் சத்தத்தை அவர் கேட்டு குடியிருப்பை விட்டு வெளியேறி தண்ணீர் தொட்டிக்கு அருகில் தஞ்சம் புகுந்தார். அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. தேவாலயத்தின் சமையல்காரரும் அந்நேரத்தில் பாதிரியாராக அபிஷேகம் பெற இருந்தவருடன் இருந்தார். தாக்குதலிலிருந்து தஞ்சம் பெற அவர் தேவாலயத்திற்குள் விரைந்தார். இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் அவரும் ஒருவர்.



தேவாலயத்தின் பிரதான ஞாயிறு பாடசாலை ஆசிரியரும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டார். ஒரு பெண்ணின் உடல், தாக்குதல் காரணமாக சிதறியது. குறைந்தது ஒரு குழந்தை உயிரிழந்தது. சபை பாதிரியார் மற்றும் சபையின் செயலாளரால் கையெழுத்திடப்பட்ட கடிதத்தில், இருவர் உயிரோடு தீக்கிரையாகினர் என்றும், ஏனையோர் கட்டட இடிபாடுகளில் சிக்கி நசுங்கி உயிரிழந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தாக்குதலில் உயிரிழந்த ஒரு பெண், அவர் அணிந்திருந்த நகைகள் மற்றும் அவர் வீட்டை விட்டு வெளியேறும் முன் கணவன் கொடுத்த ரூ. 35 அவரது கைக்குட்டைக்குள் இருந்ததைக் கொண்டு அடையாளம் காணப்பட்டார். கொல்லப்பட்டவர்களின் உடல் உறுப்புக்கள் சிதறிக் கிடந்தன. இந்த உடல் உறுப்புக்கள் மற்றும் இடிபாடுகளின் கீழ் இறந்தவர்கள் ஒரு பிரேதப்பெட்டியில் வைத்து புதைக்கப்பட்டனர். இத்தாக்குதலில் உயிர்பிழைத்த ஒருவர் தனது அனுபவத்தைப் பகிர்கையில், இத்தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் தாக்குதல் தொடர்பான கனவுகள் பல நாட்களாக தோன்றியதாக தெரிவித்தார். இதன் காரணமாக அவர் மருத்துவ ஆலோசனை பெறவேண்டி இருந்ததாகவும் அவர் கூறினார். ஆலயத்தின் உலோகக் கூடாரம் மற்றும் புனித புரவலன்களும் இத்தாக்குதல் காரணமாக சிதறிக்கிடந்தன. தேவாலயத்தின் மேற்கூரை, மின்கம்பங்கள் மற்றும் சுவர்கள் இடிந்து விழுந்தன. பாதிரியாரின் குடியிருப்பு, தேவாலய சபைக் கூடம் மற்றும் அருகிலுள்ள கட்டடங்களும் சேதமடைந்தன. வீசப்பட்ட வெடிகுண்டின் சக்தி அதிகமாயிருந்த காரணத்தினால், ஆலயக்கதவு ஒன்றின் 'கீல்' ஒரு மரத்தின் மேல் வீசப்பட்டு இருந்தது.



குருநகரில் உள்ள கத்தோலிக்கர்களின் தோற்றம் சுமார் 400 ஆண்டுகளுக்கு (1624ஆம் ஆண்டு வரை) முன்னர் பதியப்பட்டதோடு, 1861ஆம் ஆண்டு கட்டப்பட்ட புனித ஜேம்ஸ் தேவாலயம் யாழ்ப்பாணத்தில் உள்ள பழமையான தேவாலயங்களில் ஒன்றாகும். 1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்த மிகப்பெரிய தேவாலயங்களில் இதுவும் ஒன்றாக இருந்தபடியினால், வானிலிருந்து எளிதாக அடையாளம் காணப்படக்கூடிய ஒரு தேவாலயமாக இருந்திருக்கும். இந்த ஆலயத்தைச் சூழவுள்ள பகுதியில் தீவிரவாதிகளின் முகாம்கள் இருக்கவில்லை என்று பாதிரியார் மற்றும் திருச்சபை செயலாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. தேவாலயங்கள் மற்றும் கோவில்களில் தஞ்சம் அடையுமாறு இலங்கை அரசாங்கம் பலமுறை மக்களைக் கேட்டுக்கொண்டதாகவும், அதன்பின் அதன் ஆயுதப்படைகள் இந்தக் கட்டடங்கள் மீது குண்டுகளை வீசி மக்களைக் கொன்று குவித்ததாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேவாலய குண்டுதாக்குதலுக்கு முன்னரும் பின்னரும்**

தேவாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு முன்னரும், அதன் பின்னரும், தொடர் குண்டுத்தாக்குதல்கள் பதிவாகியுள்ளன. குறிப்பாக, 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி, யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் (கச்சேரி) குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி, மாவட்டச் செயலாளரும் (அரசாங்க அதிபர்) காயமடைந்தார். தேவாலய குண்டுதாக்குதல் இடம்பெற்ற அதேநாள் மாலை, கொக்குவில் நந்தவில் அம்மன் இந்து ஆலயம் மீது குண்டுத்தாக்குல் இடம்பெற்றது. அத்தோடு, மறுநாள் 1993ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் திகதி அன்று வரணியில் உள்ள வைரவர் இந்து ஆலயம் மீதும் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இத்தாக்குதல் காரணமாக இக்கோவில் முற்றாக அழிக்கப்பட்டது. பலர் காயமடைந்துள்ளதுடன், அருகில் உள்ள பல வீடுகளும் சேதமடைந்துள்ளன. தேவாலய குண்டுதாக்குதல் இடம்பெற்று மறுநாள், 1993ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் திகதி, வைத்தியசாலை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள யாழ். பொது வைத்தியசாலை நுழைவாயிலில் இருந்து 50 மீற்றருக்குள் குண்டுகள் வீசப்பட்டன. 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி கிளிநொச்சி மற்றும் முள்ளியவளை வைத்தியசாலைகள் மீது குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

1993ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி உள்ளூர் மக்களால் தேவாலயத்தில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அலுவலகம் மற்றும் மாவட்டச் செயலகம் வரை

(16ம் பக்கம் பார்க்க)

# 1993 ஆண்டு யாழ். புனித ஜேம்ஸ்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

மௌனப் போராட்ட பேரணி ஒன்று நடாத்தப்பட்டது. இப்பேரணியில் பங்குபற்றிய சிலர் தங்கள் வாயை கருப்புத் துணியால் மூடிக்கொண்டு பதாகைகளை ஏந்தியிருந்தனர் என அதில் பங்கேற்ற ஒருவர் நினைவுகூர்ந்தார். ஆர்ப்பாட்டம் நடைபெற்ற அன்று மாலை தேவாலயத்திற்கு அருகிலுள்ள பகுதிகள் மீது மீண்டும் வான்வழி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களில் குறைந்தது 8 பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்தனர். இத்தாக்குதல்களின் போது பல கடைகளும் சேதமடைந்தன. குறித்த பேரணி நடைபெற்ற பின்னர் டிசம்பர் 3ஆம் திகதி மாலை தனது வீட்டில் ஷெல் விழுந்ததாக தேவாலயத் தலைவர் ஒருவர் கூறினார்.

1993ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி கொழும்பு கத்தோலிக்க பேராயர் வெளியிட்ட சிங்கள மற்றும் ஆங்கில வார இதழ்களான 'ஞானார்த்த பிரதீபய' மற்றும் 'மெசஞ்சர்' ஆகியவை இத்தாக்குதல்கள் பற்றி செய்திகளை வெளியிட்டிருந்தன. மேலும், இத்தாக்குதல் தொடர்பாக கருத்து தெரிவித்த அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இது தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட துரதிர்ஷ்டவசமான சம்பவம் எனக் கூறியதாக இரு பத்திரிகைகளும் தெரிவித்தன. எனினும், யாழ்ப்பாண கத்தோலிக்க பேராயர் அப்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில், இந்தக் குண்டுவெடிப்புக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்க வேண்டும் என தெரிவித்திருந்தார். இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை இந்த விடயத்தை அரசாங்கத்திடம் எடுத்துச் சொன்னதாகவோ அல்லது அது பற்றி கருத்து தெரிவித்ததாகவோ எந்த அறிக்கையும் என்னால் காண முடியவில்லை.

சேதத்துக்குள்ளான தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப தேவாலய சமூகம் யாவரும் ஒன்று கூடி, "புனித. ஜேம்ஸ் தேவாலய புனரமைப்பு சபை"யை தாபித்தனர். இதில் யாழ்ப்பாண கத்தோலிக்க ஆயரும் அங்கத்தவராக இருந்தார். இது தொடர்பான கூட்டங்கள் மற்றும் கடிதப் பரிமாற்றங்களின் சில குறிப்புகள் கிடைக்கப்பெற்றன. யாழ்ப்பாணத்தில் அப்போது நிலவிய போர் மற்றும் பதற்ற சூழ்நிலைகள் காரணமாக, இலங்கை அரசாங்கத்தால் கட்டுமானப் பொருட்கள் உட்பட பல பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இப்பணிகளுக்காக மணல் கொண்டுவருவதற்குக் கூட அரசாங்க அதிபரின் அனுமதி பெற வேண்டிய நிலை காணப்பட்டது. 1993 முதல் 2002 வரை ஜனாதிபதி, புனர்நிர்மானம், புனர்வாழ்வு மற்றும் சமூகநல அமைச்சு, வடக்கின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அதிகாரசபை மற்றும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஆகியோருக்கு இடையில் கடிதங்கள் மூலமாக பல தடவைகள் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன. 2000ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி வரை, திருச்சபை மக்கள் மற்றும் உபயதாரர்களின் பங்களிப்புகள் மூலம் ரூ. 3,286,240 பெறப்பட்டதன் விளைவாக தேவாலயத்தின் பிரதான பிரிவின் தூண்கள், சட்டங்கள், கூரை மற்றும் சுவர்கள் ஆகியவை பழுதுபார்க்கப்பட்டு திருத்தப்பட்டன. மேலும், தேவாலய அங்கத்தவர்கள் சீமெந்து, மணல் மற்றும் பிற கட்டுமானப் பொருட்களையும் வழங்கி உதவினார். தேவாலயத் தொடர்பாடல் ஆவணங்களின்படி, 1994ஆம் ஆண்டு பெப்ரவரி 6 இல், தேவாலயத்தைத் திருத்துவதற்காக யாழ். பொறியியலாளர் திணைக்களம் ரூ. 9,078,000 தொகையினை மதிப்பீடு செய்தது. எனினும், ஜனவரி 12, 2002 வரை, இராணுவம் உட்பட அரசால் ரூ, 2,350,000 மட்டுமே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### நீதி மற்றும் நினைவுச்சின்னங்கள்!

தேவாலயத்தின் பழுதுபார்க்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இத்தேவாலயத்தின் வயதான அங்கத்தவர்கள், திருத்த வேலைகளின் பின்னர் தேவாலயம் அதே அளவு, வடிவமைப்பு போன்றவற்றைத் தக்க வைத்துக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். தேவாலயம் ஆரம்பிக்கப்பட்ட 1624 முதல் 2013 வரை "குருநகர் தேவாலயத்தின் அடையாளங்கள்"பட்டியலிடப்பட்ட பலகையில், 1993இல் "தேவாலயத்தின் மீதான வான்வழி தாக்குதல் - 9 பேர் கொல்லப்பட்டார்கள்" என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டு 31 குருநகர் மீனவர்கள் கடலில் படுகொலை செய்யப்பட்டதையும் (ஊடக அறிக்கைகள் மற்றும் உள்ளூர் மக்கள் கடற்படையைக் குற்றம்சாட்டுவது) மற்றும் 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெளியேறியதையும் இந்தச் சின்னம் குறிப்பிடுகிறது. தேவாலயத்தில் வெடி குண்டு ஒன்று விழுந்த இடத்தில், **"Honour for the Dead, Warning to the Living, Temple for Justice"** என்ற வாசகங்களுடன் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. "தலைமுறை தலைமுறையாய் இடிந்துகிடந்த பாழான பட்டணங்களைப் புதிதாய்க்கட்டுவார்கள். கர்த்தராகிய நான் நீதியை நேசிக்கிறேன்" என்ற வேதாகம வாக்கியம் இந்த நினைவுச்சின்னத்தின் மேல் கூரையில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஆண்டுதோறும் நவம்பர் 13ஆம் தேதி நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படுவதுடன், இந்தத் துயரச் சம்பவம் நடந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டும் நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

என் அறிவிற்கு எட்டிய வரையில், போரின் போது ஒரு தேவாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது பெரிய தாக்குதல் இது. இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் உள்ள நவாலி மற்றும் அல்லைப்பிட்டி தேவாலயங்கள் மற்றும் மன்னார் மாவட்டத்தில் மடு தேவாலயம் மற்றும் பேசாலை தேவாலயங்கள் போன்ற தேவாலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ்களில் இறப்புக்கான காரணம் "வான்வழி குண்டுவீச்சு" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இத்தாக்குதலில் கொல்லப்பட்ட தாய் ஒருவரின் குழந்தைகளுக்கு தலா ரூ. 10,000 வழங்கப்பட்டுள்ளது. எனினும், இறந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் வழங்கப்பட்ட இழப்பீடு பற்றி அதிக தகவல்கள் கிடைக்கவில்லை. தேவாலயத்தின் மீது இரண்டு குண்டுகளை வீசிய விமானப்படை விமானத்தில் இருந்தவர்கள் யார், யார் உத்தரவு பிறப்பித்தது போன்றவற்றைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமான விடயமல்ல. தேவாலயத்தில் நான் இருந்தபோது, இத்தாக்குதலுக்குப் பொறுப்பானவர்களைப் பொறுப்புக் கூறுவதற்கு ஏதேனும் விசாரணைகள் மற்றும் முயற்சிகள் நடந்ததா என்று கேட்டேன். இதை நான் கேட்டபோது இருவரும் என் முகத்தைப் பார்த்து சிரித்தனர். இந்தப் படுகொலைக்கு விமானப்படைதான் காரணம் என்பதற்கு ஏராளமான சான்றுகள் மற்றும் ஒப்புதல்கள் இருந்தபோதிலும், விசாரணைகள், வழக்குகள், தண்டனைகள் எதுவும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இது மிகவும் தாமதமான ஒப்புக்கொள்ளலாக இருந்தாலும், அர்த்தமுள்ள ஒப்புதல், மன்னிப்பு, இழப்பீடு மற்றும் பொறுப்பானவர்களை சட்டபூர்வமாக பொறுப்பேற்க வைப்பதற்கு காலம் தள்ளிப்போகவில்லை.

ஆதாரங்கள்: புனித ஜேம்ஸ் தேவாலய காப்பகங்கள், 1993ஆம் ஆண்டுக்கான ஊடக அறிக்கைகள், உயிர் தப்பியவர்களின் சாட்சியங்கள், நேரில் கண்ட சாட்சிகள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள், கத்தோலிக்க பாதிரியார்கள் மற்றும் தேவாலயப் பணியாளர்கள்.

